بسم الله الرحمن الرحيم     نحمده ونصلي على رسوله الكريم     وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 6 | இதழ் 48

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

26 ரபீவுஸ் ஸானி 1443 ஹிஜ்ரி கமரி 02 நுபுவ்வத் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 2 டிசம்பர் 2021


## அல்லாஹ்வின் கட்டளை

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِیْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ وَجَعَلَ الظُّلُمٰتِ وَالنُّوْرَ ؕ ثُمَّ الَّذِیْنَ كَفَرُوْا بِرَبِّهِمْ یَعْدِلُوْنَ

வானங்களையும், பூமியையும் படைத்து இருள்களையும் ஒளியையும் அமைத்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரியது. இவ்வாறிருந்தும் நிராகரிப்பாளர்கள் தங்கள் இறைவனுக்கு இணை வைக்கின்றனர்.

(6:2)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**எப்போதும் உங்களது சொல்லையும், செயலையும் சரியாக வைத்துக் கொள்ளுங்கள். சஹாபிகள் தமது வாழ்க்கையில் வெளிப்படுத்தியதுபோன்று அதில் இணக்கத்தை வெளிப்படுத்துங்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் முன்னுதாரணத்தை எப்போதும் உங்கள் முன் வைத்துக் கொள்ளுங்கள். அன்னார் நட்பிற்கான உரிமையை எவ்வாறு செலுத்தினார்கள் என்றால் அதற்கு (நிகரான) உதாரணம் உலகத்தில் கிடைப்பதில்லை**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### சொல்லும் செயலும் ஒன்றாக இருத்தல் வேண்டும்

மனிதனின் சொல்லும் செயலும் ஒன்றுக்கொன்று ஏற்புடையதாக இருப்பது மிக மிக அவசியமாகும். அவ்வாறு ஒன்றாக இல்லையென்றால், பின்னர் பயனில்லை. எனவே அல்லாஹ் اَتَاْمُرُوْنَ النَّاسَ بِالْبِرِّ وَ تَنْسَوْنَ اَنْفُسَكُمْ என்று திருக்குர்ஆனில் கூறுகின்றான். அதாவது நீங்கள் மக்களுக்கு நன்மையை ஏவுகின்றீர்கள். ஆனால் உங்களை அந்த நன்மைக்கு ஏற்புடையவராக ஆக்கிக் கொள்வதில்லை. மாறாக, மறந்து விடுகின்றீர்கள். பின்னர் மற்றோர் இடத்தில் لِمَ تَقُوْلُوْنَ مَا لَا تَفْعَلُوْنَ என்று கூறுகின்றான். நம்பிக்கையாளர் இரட்டை வேடம் போடக் கூடாது. கோழைத்தனமும், நயவஞ்சகமும் சொல்லும் செயலும் ஒன்றாக இருக்கும் நிலையில் விலகி விடும்.

எப்போதும் உங்களது சொல்லையும், செயலையும் சரியாக வைத்துக் கொள்ளுங்கள். சஹாபிகள் தமது வாழ்க்கையில் வெளிப்படுத்தியதுபோன்று அதில் இணக்கத்தை வெளிப்படுத்துங்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் முன்னுதாரணத்தை எப்போதும் உங்கள் முன் வைத்துக் கொள்ளுங்கள். அன்னார் நட்பிற்கான உரிமையை எவ்வாறு செலுத்தினார்கள் என்றால் அதற்கு (நிகரான) உதாரணம் உலகத்தில் கிடைப்பதில்லை.

அதேபோன்று நீங்களும் அவர்களின் அடிச்சுவட்டில் நடந்து சென்று உங்களின் உண்மையையும், நன்றியுணர்வின் முன்மாதிரியையும் காட்டுங்கள்.

**ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் முன்னுதாரணத்தை உங்கள் முன் வையுங்கள்**

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் முன்னுதாரணத்தை எப்போதும் உங்கள் முன்

(தொடர்ச்சி 12 வது பக்கம்.....)

**உண்மை என்னவென்றால் மனிதர்களில் எவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழைப்பிற்கு அப்பாற்பட்டவர் இல்லை**

சூரா அல்ஜின் மற்றும் சூரா அஹ்காஃபிலிருந்து தெரிய வருவது என்னவென்றால் ஜின்களின் ஒரு கூட்டம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டது. ஜின்களின் ஒரு குழு இறைத்தூதர் (ஸல்) அவர்களை சந்திப்பதற்காக வந்தது என்று ஹதீஸ்களிலிருந்தும் தெரிய வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்ட அந்த ஜின்கள் மனிதர்களாக இருந்தனர் என்று ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

இது தொடர்பான ஐந்து சான்றுகளைப் பற்றிய குறிப்புகள் கடந்த இதழில் வழங்கப்பட்டுள்ளன.

ஆறாவது சான்று: அந்த நம்பிக்கையாளர்கள் ஜின்களின் மனிதர்களாக இருந்தார்கள் என்பதற்கான ஆறாவது சான்று இதுவாகும். முஸ்னத் அஹ்மது பின் ஹம்பலில் இந்த ஹதீஸ் இடம் பெற்றுள்ளது:

قال(رسول الله صلعم) لهم لقد اعطيت الليلة خمسًا

ما اعطيهن احدٌ قبلي انّا انا فارسلت الى الناس كلهم عامة وكان من قبلي انما يرسل الى قومه

(தொகுதி 2 பக்கம் 222)

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தஹஜ்ஜுத் தொழுகையை தொழுது விட்டு தனக்குப் பின்னால் தொழுகையில் இணைந்திருந்த காவலாளியிடம் இவ்வாறு கூறினார்கள்: இன்று எனக்கு ஐந்து சிறப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவை எப்படிப்பட்டவை என்றால் இதற்கு முன்பு எவருக்கும் இந்த சிறப்புகள் வழங்கப்படவில்லை. ஒன்று, நான் எந்த விதிவிலக்குமின்றி அனைத்து சமுதாயத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளேன். மேலும் எனக்கு முன்னர் தோன்றிய நபிமார்கள் தமது சமுதாயத்திற்கு மட்டுமே தோன்றி இருந்தனர். (எஞ்சிய நான்கு சிறப்புகளும் கூறப்பட்டுள்ளன. இதையும் நினைவிற் கொள்ளுங்கள். அதாவது அந்த இரவில் ஐந்து சிறப்புகள் ஒன்றுகூட்டப்பட்டு அன்னாருக்கு கூறப்பட்டன.

(தொடர்ச்சி 12 வது பக்கம்.....)

## நபிமொழி

**ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் தல்பியா சொற்கள்**

1549: ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தல்பியா சொற்கள் இவையாகும்.

لَبَّيْكَ اللّٰهُمَّ لَبَّيْكَ لَبَّيْكَ لَا شَرِيْكَ لَكَ لَبَّيْكَ اِنَّ الْحَمْدَ وَالنِّعْمَةَ لَكَ وَالْمُلْكَ لَا شَرِيْكَ

பொருள்: அல்லாஹ்வே! (இதோ உன் அழைப்பை ஏற்று) நான் வந்து விட்டேன். நான் வந்து விட்டேன். உனக்கு எந்த இணையுமில்லை. நான் வந்து விட்டேன். நான் வந்து விட்டேன். எல்லா சிறப்பும் எல்லா அருட்கொடையும் உனக்கே உரியன. எல்லா ஆட்சியும் உன்னுடையதே ஆகும். உனக்கு இணையானவர் எவருமில்லை.

1550. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தல்பியா எவ்வாறு இருந்தது என்பதை நான் நன்கறிவேன் என்று அன்னார் (ரலி) கூறி வந்தார்கள். நான் வந்து விட்டேன். அல்லாஹ்வே! (இதோ உன் அழைப்பை ஏற்று) நான் வந்து விட்டேன். நான் வந்து விட்டேன். உனக்கு எவரும் இணையில்லை. (உன் அழைப்பை ஏற்று) நான் வந்து விட்டேன். நிச்சயமாக எல்லாப்புகழும், அருட்கொடையும் உனக்கே உரியன. இதுவே நபி (ஸல்) அவர்களின் தல்பியவாகும்.

(சஹீஹ் புகாரி, தொகுதி 3 பாடம் கிதாபுல் ஹஜ் – 2008 ஆம் ஆண்டு காதியான் வெளியீடு)

## இந்த இதழில்


*திருக்குர்ஆன்*

*நபிமொழி*

*மல்ஃபூஸாத்*

*தஃப்ஸீரே கபீர்*

*(திருக்குர்ஆன் விளக்கவுரை )*

*குத்பா பேருரை*

*29 அக்டோபர் 2021 (முழுவதுமாக)*



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 29 அக்டோபர் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **அஹா** மாதம் **29 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நற்செய்தி வழங்கியிருந்த நபர்களில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் ஒருவர் ஆவார்கள். ஹஸ்ரத் அபூமூஸா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் மதீனாவின் தோட்டங்களில் ஒரு தோட்டத்தில் இருந்தேன். அப்போது ஒரு நபர் வந்தார். கதவை திறக்கும்படி கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவருக்காக கதவை திறக்கும்படியும், அவருக்கு சொர்க்கத்திற்கான நற்செய்தியை வழங்குமாறும் கூறினார்கள். நான் அவருக்கு கதவை திறந்தேன். அப்போது அவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் என்பதை கண்டு கொண்டேன். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழங்கியிருந்த நற்செய்தியை அவரிடம் கூறினேன். அன்னார், اَلْحَمْدُ لِلّٰهِ என்று கூறினார்கள். பின்னர் அடுத்து ஒரு நபர் வந்தார். அவர் கதவை திறக்கும்படி கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவருக்காக கதவை திறக்கும்படியும், அவருக்கு சொர்க்கத்தின் நற்செய்தியை வழங்கும்படியும் கூறினார்கள். நான் கதவை திறந்தபோது அது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் என்பதைக் கண்டேன். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழங்கிய செய்தியை அன்னாரிடம் கூறினேன். அதற்கு அன்னார் اَلْحَمْدُ لِلّٰهِ என்று கூறினார்கள்.

பின்னர் மற்றெருவர் வந்தார். கதவை திறக்கும்படி கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்காக கதவை திறக்கும்படியும், அவருக்கு ஒரு துன்பம் வந்தடையும். இருந்தபோதிலும் சொர்க்கத்திற்கான நற்செய்தியை அவருக்கு கூறுங்கள் என்று கூறினார்கள். அவர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களாக இருந்தார்கள் என்பதை நான் கண்டு கொண்டேன். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய விஷயத்தை அன்னாரிடம் கூறினேன். அன்னாரும் اَلْحَمْدُ لِلّٰهِ என்று கூறினார்கள். பின்னர் துன்பத்திலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு அல்லாஹ்விடமே உதவி தேட முடியும் என்று கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாப் ஃபஸாயில் அஸ்ஹாபுன் நபி (ஸல்) பாப் மனாகிப் உமர் பின் கத்தாப் ஹதீஸ் எண் 3693)

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல் ) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சொர்க்கவாசியாவார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சொர்க்கவாசியாவார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் சொர்க்கவாசியாவார்கள். இந்த பத்து நபர்களைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் (நற்செய்தி) கூறியிருந்தார்கள். ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் சொர்க்கவாசியாவார்கள். ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் சொர்க்கவாசியாவார்கள். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் சொர்க்கவாசியாவார்கள். ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் சொர்க்கவாசியாவார்கள். ஹஸ்ரத் சஹீத் பின் ஸைது (ரலி) அவர்கள் சொர்க்கவாசியாவார்கள். மேலும் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜராஹ் (ரலி) அவர்கள் சொர்க்கவாசியாவார்கள்.

(சுனன் திர்மிதி, கிதாப் மனாகிப் பாப் மனாகிப் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் ஹதீஸ் எண் 3747)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஒரு முறை நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தோம். அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நான் உறங்கிக் கொண்டிருந்தேன். அப்போது என்னை நான் சொர்க்கத்தில் கண்டேன். மேலும் அங்கு நான் கண்ட காட்சி என்னவென்றால், ஒரு பெண் ஒரு மாளிகையில் வுளு செய்து கொண்டிருக்கின்றார். இந்த மாளிகை யாருடையது? என்று நான் கேட்டேன். அதற்கு உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களுடையதாகும் என்று மக்கள் கூறினர். அன்னாரின் தன்மானத்தைப் பற்றிய எண்ணம் எனக்கு வந்தபோது நான் திரும்பி வந்து விட்டேன். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் அங்கு அமர்ந்திருந்தார்கள். இதைக் கேட்டு அன்னார் (ரலி) அவர்கள் அழுதார்கள். மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் தங்களிடம் தன்மானம் கொள்வேனா? என்று கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாப் பதவுல் குல்க் مَا جَاءَ فِي صِفَةِ الْجَنَّةِ وَأَنَّهَا مَخْلُوقَ ஹதீஸ் எண் 3242)

ஹஸ்ரத் அபூசயீத் குத்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: عِلِّيِّين வாசிகளில் ஒரு நபர் சொர்க்கவாசிகளை எட்டிப் பார்ப்பார். அப்போது அவரது முகத்தின் காரணமாக சொர்க்கம் ஒளி வீசும். ஒரு வகையில் அது ஒளிமயமான நட்சத்திரத்தைப் போன்று இருக்கும். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் அந்த நபர்களைச் சார்ந்தவர்கள் ஆவர். அவர்கள் இருவரும் மிகவும் சிறப்புமிக்கவர்கள் ஆவர்.

(சுனன் அபூதாவூது, கிதாபுல் ஹுரூஃப் வல் கராஅத் ஹதீஸ் எண் 3987)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களிடத்தில் சொர்க்கவாசிகளைச் சார்ந்தவர்களில் ஒருவர் வந்து கொண்டிருக்கின்றார். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்தார்கள். பின்னர் உங்களில் சொர்க்கவாசிகளைச் சார்ந்த ஒருவர் வந்து கொண்டிக்கின்றார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வந்தார்கள்.

(சுனன் திர்மிதி, கிதாபுல் மனாகிப்... ஹதீஸ் எண் 3694)

இதேபோன்று மற்றோர் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றி கூறினார்கள். அபூபக்ர் (ரலி) மற்றும் உமர் (ரலி) ஆகியோர் சொர்க்கத்தின் அவ்வலீன்கள் மற்றும் ஆகரீன்களில் அனைத்து பெரிய வயதுடைய மக்களின் தலைவர் ஆவார்கள். நபிமார்கள் மற்றும் தூதர்களைத் தவிர.

(சுனன் திர்மிதி, கிதாபுல் மனாகிப்... ஹதீஸ் எண் 3664)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உமர் பின் கத்தாப் (ரலி) சொர்க்கவாசிகளின் விளக்கு ஆவார்கள்.

(இமாம் அஸ்ஃபானி அவர்கள் எழுதிய ஹுல்யத்துல் அவ்லியா என்ற நூல், தொகுதி 6 பக்கம் 309 அறிவிப்பு எண் 8950 – 2007 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அந்தஸ்தைக் குறித்து மற்றோர் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் உக்பா பின் ஆமிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். எனக்குப் பிறகு ஒரு நபி இருந்தால் பின்னர் நிச்சயமாக உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களாகவே இருப்பார்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(சுனன் திர்மிதி, கிதாபுல் மனாகிப் பாப் லவ்கான நபி பஃதி... ஹதீஸ் எண் 3686)

அதாவது இங்கு நபித்துவத்திற்குப் பிறகு உடனடியாக கூறப்படுகின்ற விஷயமாகும். ஏனென்றால் தோன்றக்கூடிய மஸீஹ் மற்றும் மஹ்தியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுயமே நபியுல்லாஹ் (அல்லாஹ்வின்

நபி) என்று கூறியுள்ளார்கள்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஃபித்ன் பாப் ஸிக்ருத் தஜ்ஜால்... ஹதீஸ் எண் 7373)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை முஹத்திஸ் என கூறியது தொடர்பாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக முந்தைய சமுதாயங்களில் முஹத்திஸ்கள் இருந்து வந்தனர். எனது சமுதாயத்தில் ஒருவர் உள்ளார் என்றால் அவர் உமர் பின் கத்தாப் ஆவார்.

(சுனன் திர்மிதி, கிதாபுல் மனாகிப்.... ஹதீஸ் எண் 3693)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களுக்கு முன் சென்ற சமுதாயங்களைச் சார்ந்த மக்களில் முஹத்திஸ்கள் இருந்து வந்தனர். எனது சமுதாயத்தில் அப்படி ஒருவர் இருக்கின்றார் என்றால் அவர் உமர் (ரலி) ஆவார். அதிகமான இல்ஹாம்களும், ஆன்மீக காட்சிகளும் கிடைக்கப் பெறக்கூடிய மக்கள் முஹத்திஸ்கள் ஆவர்.

அடுத்து அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களுக்கு முன் சென்ற பனீ இஸ்ராயீல் சமுதாயத்தில் சில மக்கள் தோன்றியுள்ளனர். அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் அவர்கள் நபியாக இல்லாதிருந்தபோதிலும் அல்லாஹ் அவர்களுடன் உரையாடி வந்துள்ளான். (எனவே) எனது சமுதாயத்திலும் அப்படிப்பட்ட மக்களைச் சார்ந்த ஒருவர் இருக்கின்றார் என்றால் அவர் உமர் (ரலி) ஆவார்.

(சஹீஹுல் புகாரி, கிதாப் ஃபஸாயில் அஸ்ஹாபுன் நபி (ஸல்) பாப் மனாகிப் உமர் பின் கத்தாப் ஹதீஸ் எண் 3689)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவன் எப்போதும் உவமைகளை கையாண்டு வருகின்றான். இயல்பு, தன்மை, ஆற்றல் ஆகியவற்றின் அடிப்படையில் ஒருவரின் பெயரை மற்றவருக்கு சூட்டி விடுகிறான். இப்ராஹீம் (அலை) அவர்களின் உள்ளத்தின் நிலைகளுக்கேற்ப உள்ளத்தை கொண்டவர் இறைவனின் பார்வையில் இப்ராஹீம் ஆவார். மேலும் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களின் உள்ளத்தை பெற்ற நபர் இறைவனின் பார்வையில் உமர் ஃபாரூக் ஆவார். இந்த சமுதாயத்தில் இறைவன் பேசுகின்ற முஹத்திஸ் உள்ளார் என்றால் அவர் உமர் (ரலி) ஆவார் என்ற ஹதீஸை நீங்கள் படிக்கவில்லையா?

தற்போது முஹத்தஸிய்யத் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் முற்றுப் பெற்று விட்டது? என்பது தான் இந்த ஹதீஸின் பொருளா? ஒருபோதும் இல்லை. மாறாக, இந்த ஹதீஸின் பொருள் என்னவென்றால், எவருடைய ஆன்மீக நிலை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஆன்மீக நிலைக்கேற்ப ஆகி விட்டதோ அவரே தேவையின் நேரத்தில் முஹத்திஸ் ஆக இருப்பார்.

பின்னர் அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த வகையில் இந்த எளியவனுக்கும் இந்த அந்தஸ்தைக் குறித்து فِيْكَ مَادَّةٌ فَارُوْقِيَّةٌ என்ற இல்ஹாம் இறங்கியது.

(ஃபத்ஹே இஸ்லாம், ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 11 அடிக்குறிப்பு)

முழுமையான இல்ஹாம் இவ்வாறாகும்.

''اَنْتَ مُحَدَّثُ اللّٰہِ فِيْكَ مَادَّةٌ فَارُوْقِيَّةٌ''

பொருள்: நீர் முஹத்திஸுல்லாஹ் ஆவீர். உம்மிடம் ஃபாரூக்கி தன்மை உள்ளது.

(தத்கிரா பக்கம் 84 – 4 ஆம் பதிப்பு)

நான் முந்தைய பல குத்பாக்களில் ஒரு குத்பாவில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பாதுகாப்பு மற்றும் திருக்குர்ஆனை தொகுப்பதற்கான ஆசோனைகளை வழங்கியது தொடர்பாக கூறியிருந்தேன். இது தொடர்பாக இங்கும் சில விஷயங்களை குறிப்பிடுகின்றேன். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் யமாமாவில் திருக்குர்ஆனை மனனம் செய்த 70 நபர்கள் ஷஹீதானார்கள்.

இது தொடர்பாக ஹஸ்ரத் ஸைது பின் சாபித் அன்ஸாரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

யமாமா மக்கள் ஷஹீதாக்கப்பட்டபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் என்னை அழைத்தார்கள். அப்போது அன்னாருடன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: உமர் (ரலி) அவர்கள் என்னிடம் வந்துள்ளார்கள். யமாமா போரில் அதிகமான மக்கள் ஷஹீதாகி விட்டார்கள். மேலும் பல போர்களில் காரிகள் கொல்லப்பட்டு விடக்கூடாது என்றும், இவ்வாறு திருக்குர்ஆனை நீங்கள் தொகுக்காவிட்டால் திருக்குர்ஆனின் பெரும் பகுதி வீணாகி விடுமோ என்று அச்சமாக உள்ளது என்றும் அன்னார் கூறுகின்றார்கள்.

எனவே நீங்கள் திருக்குர்ஆனை ஒரிடத்தில் தொகுத்து விடுங்கள். அதாவது எனது கருத்து என்னவென்றால், நீங்கள் திருக்குர்ஆனை தொகுக்க வேண்டும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்யாத ஒன்றை நான் எப்படி செய்வது? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

அதற்கு அல்லாஹ்வின் மீது ஆணையாக! தங்களின் இந்த பணி மிக நல்ல பணியாகும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: என்னிடம் உமர் (ரலி) இதையே மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருந்தார். எந்த அளவுக்கென்றால், அல்லாஹ் அதற்காக எனது உள்ளத்தை திறந்து விட்டான். மேலும் உமர் (ரலி) அவர்கள் உகந்ததாக கருதிய விஷயத்தை தற்போது நானும் உகந்ததாக கருதுகின்றேன். அதாவது அது தொகுக்கப்பட வேண்டும். பின்னர் ஸைது பின் சாபித் (ரலி) அவர்கள் அதனை தொகுப்பதற்கான பணியை தொடங்கி விட்டார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுத் தஃப்ஸீர்... ஹதீஸ் எண் 4679)

நான் இதன் விளக்கத்தை இதற்கு முன்னரும் எடுத்துரைத்து விட்டேன்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் திருக்குர்ஆனை மனனம் செய்தது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முஹாஜிர் சஹாபிகளில் கீழ்க்கண்ட சஹாபிகள் திருக்குர்ஆனை மனனம் செய்தது நிரூபணமாகியுள்ளது. அபூபக்ர் (ரலி), உமர் (ரலி), உஸ்மான் (ரலி), அலி (ரலி), தல்ஹா (ரலி), சஅத் (ரலி), இப்னு மஸ்வூது (ரலி), ஹுஸைஃபா (ரலி), சாலிம் (ரலி), அபூஹுரைரா (ரலி), அப்துல்லாஹ் பின் சாயிப் (ரலி), அப்துல்லாஹ் பின் உமர் (ரலி), அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி).

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 429)

மேலும் இந்த விஷயங்களும் கூறப்படுகின்றன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறங்கிய சில வஹீகள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இணக்கமான எண்ணங்களின் காரணமாக இருந்தன அல்லது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் எண்ணங்களுக்கேற்ப அந்த வஹீகள் அமைந்திருந்தன. சிஹா ஸித்தா அறிவிப்பில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஒருமித்த கருத்தை குறித்த ஹதீஸ்கள் எங்கு வந்துள்ளனவோ அங்கு மூன்று விஷயங்களில் ஒருமித்த கருத்து தொடர்பான குறிப்பு கிடைக்கின்றது. சிஹா ஸித்தாவின் அந்த அறிவிப்புகளை மட்டும் ஒட்டுமொத்தமாக பார்ப்பதாக இருந்தால் அவற்றின் எண்ணிக்கை 7 ஆகி விடுகின்றன.

சஹீஹ் புகாரியில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடமிருந்து ஓர் அறிவிப்பு இடம் பெற்றுள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: மூன்று விஷயங்களில் எனது கருத்து எனது இறைவனின் விருப்பத்திற்கேற்ப அமைந்துள்ளது. நான் கூறினேன்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! மகாமே இப்ராஹீமை நாம் தொழும் இடமாக ஆக்கிக் கொள்ளலாமே! நான் இவ்வாறு கூறியதும் وَاتَّخِذُوْا مِنْ مَّقَامِ اِبْرٰهٖمَ مُصَلًّى என்ற வசனம் இறங்கியது.

அடுத்து பர்தாவிற்கான கட்டளை. நான் கூறியபோது பர்தாவிற்கான கட்டளையும் இறங்கியது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் தங்களின் மனைவிமார்களுக்கு பர்தாவிற்கான கட்டளையை வழங்குங்கள். ஏனென்றால் அவர்களுடன் நல்லவர்களும், தீயவர்களும் உரையாடுகின்றனர் என்று நான் கூறினேன். அப்போது பர்தாவிற்கான வசனம் இறங்கியது.

அடுத்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மனைவிமார்கள் தன்மானத்தின் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக (ஒரு விஷயத்தில்) ஒருமித்த கருத்து கொண்டார்கள். அப்போது அந்த மனைவிமார்களிடம் (அந்த மனைவிமார்களில் அன்னார் (ரலி) அவர்களின் மகளும் இருந்தார்.) உங்களுக்கு ஒருவேளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மணவிலக்கு கொடுத்து விட்டால் அன்னார் (ஸல்) அவர்களின் இறைவன் உங்களை விடச் சிறந்த மனைவிமார்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வழங்கி விடுவான் என்ற நம்பிக்கை உள்ளது என்று தான் கூறியதாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது عَسٰى رَبُّهٗٓ اِنْ طَلَّقَكُنَّ اَنْ يُّبْدِلَهٗٓ اَزْوَاجًا خَيْرًا مِّنْكُنَّ என்ற வசனம் இறங்கியது. பொருள்: அன்னார் (ஸல்) உங்களுக்கு தலாக் கொடுத்து விட்டால் அவரது

இறைவன் உங்களுக்கு பகரமாக அன்னாருக்கு உங்களை விடச் சிறந்த மனைவிமார்களை வழங்குவான்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுஸ் ஸலாத் பாப் மாஜாஅ ஃபில் கிப்லா ஹதீஸ் எண் 402)

சஹீஹ் முஸ்லிமில் ஓர் அறிவிப்பு வருகின்றது. ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: மூன்று சந்தர்ப்பங்களில் எனது இறைவனின் கருத்துடன் எனது எண்ணம் ஒருமித்திருந்தது. மகாமே இப்ராஹீம் குறித்தும், பர்தா தொடர்பாகவும், பத்ர் போர் கைதிகள் தொடர்பாகவும் (எனது எண்ணம் வஹீக்கு இணக்கமானதாக இருந்தது).

(சஹீஹ் முஸ்லிம், கிதாப் ஃபஸாயிலுஸ் சஹாபா பாப் மின் ஃபஸாயில் உமர் ஹதீஸ் எண் 6206)

ஆனால் பத்ர் போர் கைதிகளைப் பற்றிய அறிவிப்பு சரியானதல்ல. இது குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களும் பெரும் விவாதம் செய்துள்ளார்கள். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களும் சில ஆதாரங்களின் அடிப்படையில் எழுதியுள்ளார்கள். முந்தைய ஆலிம்களும், முஃபஸ்ஸிரீன்களும் எழுதியுள்ளனர். பத்ர் போர் கைதிகளுக்கு தண்டனை அளிப்பது தொடர்பான அறிவிப்பு சரியானதல்ல என்பதை நிரூபித்துள்ளனர். மேலும் இதன் விளக்கத்தை நான் கடந்த ஒரு குத்பாவில் எடுத்துரைத்துள்ளேன்.

நயவஞ்சகர்களின் ஜனாஸா தொழுகையை தொழக்கூடாது என்பது குறித்த திருக்குர்ஆன் வஹீயுடன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கருத்து ஒன்றுபடுவது தொடர்பாக சஹீஹ் முஸ்லிமில் குறிப்பு கிடைக்கின்றது. ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அப்துல்லாஹ் பின் அபீ பின் சுலூல் இறந்தபோது அவனது மகனான அப்துல்லாஹ் பின் அப்துல்லாஹ், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார். மேலும் தாங்கள் அவருக்கு தங்களது மேலாடையை வழங்குங்கள். அதில் தம்மை கஃபனிட்டுக் கொள்ளட்டும் என்று ஹுஸூர் (ஸல்) அவர்களிடம் அவர் விண்ணப்பித்தார். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு சட்டையை வழங்கி விட்டார்கள். பின்னர் தாங்கள் அவருக்கு ஜனாஸா தொழுகையை தொழ வையுங்கள் என்று அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் விண்ணப்பித்தார். அப்போது அவரது ஜனாஸா தொழுகையை நடத்துவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சென்றார்கள். அந்த நேரத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆடையை பிடித்துக் கொண்டார்கள்.

மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் அவரது ஜனாஸா தொழுகையை தொழப் போகின்றீர்கள்! ஆனால் அல்லாஹ்வோ தங்களை அவருக்கு (ஜனாஸா) தொழுகை நடத்துவதிலிருந்து தடுத்துள்ளான் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) கூறினார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் எனக்கு அதிகாரம் வழங்கியுள்ளான்.

اِسْتَغْفِرْ لَهُمْ اَوْ لَا تَسْتَغْفِرْ لَهُمْ என்று அல்லாஹ் கூறியுள்ளான். அதாவது நீர் அவர்களுக்காக இஸ்திஃபார் செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி, நீர் அவர்களுக்காக 70 முறை இஸ்திஃபார் செய்தாலும் சரியே (என்று கூறியுள்ளான்.) எனவே நான் 70 முறைக்கும் அதிகமாக அவருக்காக இஸ்திஃபார் செய்வேன். அவர் நயவஞ்சகர் ஆவார் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவனது ஜனாஸாவை தொழ வைத்தார்கள். அப்போது கம்பீரமிக்க இறைவன் وَلَا تُصَلِّ عَلٰٓى اَحَدٍ مِّنْهُمْ مَّاتَ اَبَدًا என்ற வசனத்தை இறக்கினான். நீர் அவர்களில் அதாவது நயவஞ்சகர்களில் மரணிக்கக்கூடிய எவருக்கும் ஒருபோதும் ஜனாஸா தொழுகையை தொழ வைக்க வேண்டாம். மேலும் ஒருபோதும் அவர்களின் கபர்களுக்கு சென்று துஆவிற்காக நிற்க வேண்டாம்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாப் ஃபஸாயிலுஸ் சஹாபா பாப் மின் ஃபஸாயில் உமர் ஹதீஸ் எண் 6207)

மது விலக்கு தொடர்பான திருக்குர்ஆன் வஹீயுடன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் எண்ணம் ஒருமித்து இருந்தது பற்றிய குறிப்பு சுனன் திர்மதியில் கிடைக்கின்றது.

அல்லாஹ்வே! மது குறித்து எங்களுக்கு மன நிறைவான கட்டளையை வழங்குவாயாக என்று ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் துஆ செய்தார்கள். அப்போது சூரா பகராவின் يَسْـَٔلُوْنَكَ عَنِ الْخَمْرِ وَالْمَيْسِرِ என்ற வசனம் இறங்கியது. அவர்கள் உம்மிடம் மதுவைக் குறித்தும், சூதாட்டத்தைக் குறித்தும் கேட்கின்றனர். நீர் கூறுவீராக. அவை இரண்டிலும் பெரும் பாவம் உள்ளது. மக்களுக்கு நன்மையும் உள்ளது. இரண்டின் பாவங்களின் அம்சமும் அவற்றின் நன்மைகளை விட அதிகமாகும். அந்த வசனம் இறங்கியபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இந்த வசனம் ஓதிக் காட்டப்பட்டது.

இந்த வசனத்தை கேட்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மீண்டும் இவ்வாறு கூறினார்கள்: எங்களது இறைவா! எங்களுக்கு மதுவைக் குறித்து தெளிவான கட்டளையை வழங்குவாயாக. அப்போது சூரா நிஸாவின் لَا تَقْرَبُوا الصَّلٰوةَ وَاَنْتُمْ سُكٰرٰى என்ற வசனம் இறங்கியது. நம்பிக்கை கொண்ட மக்களே! நீங்கள் மயக்க நிலையில் இருக்கும்போது தொழுகைக்கு அருகில் செல்லாதீர்கள். எந்த அளவுக்கென்றால் நீங்கள் என்ன கூறுகின்றீர்கள் என்பது பற்றி நீங்கள் அறியக்கூடியவர்களாக ஆகி விட வேண்டும். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மீண்டும் வந்தார்கள். மேலும் அன்னாருக்கு இந்த வசனம் ஓதிக் காட்டப்பட்டது. அன்னார் மீண்டும் கூறினார்கள்: அல்லாஹ்வே! எங்களுக்கு மதுவைக் குறித்து தெளிவான கட்டளையை வழங்கி விடுவாயாக. அப்போது சூரா மாயிதாவின்,

اِنَّمَا يُرِيْدُ الشَّيْطٰنُ اَنْ يُّوْقِعَ بَيْنَكُمُ الْعَدَاوَةَ
وَالْبَغْضَآءَ فِي الْخَمْرِ وَالْمَيْسِرِ وَيَصُدَّكُمْ عَنْ ذِكْرِ اللّٰهِ
وَعَنِ الصَّلٰوةِ فَهَلْ اَنْتُمْ مُّنْتَهُوْنَ

என்ற வசனம் இறங்கியது.

மது மற்றும் சூதாட்டத்தின் மூலமாக உங்களுக்கு மத்தியில் பகைமை மற்றும் காழ்ப்புணர்ச்சியை உருவாக்கி உங்களை இறைவனை நினைவு கூர்வதிலிருந்தும், தொழுகையிலிருந்தும் தடுத்து விட வேண்டும் என்று ஷய்த்தான் விரும்புகின்றான். எனவே நீங்கள் (அவற்றிலிருந்து) தவிர்ந்து கொள்ள மாட்டீர்களா? ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மீண்டும் வந்தார்கள். அப்போது அவர்களுக்கு இந்த வசனம் ஓதிக் காட்டப்பட்டது. அன்னார் நாங்கள் விலகி இருக்கின்றோம். விலகி இருக்கின்றோம் என்று கூறினார்கள்.

(சுனன் திர்மிதி, கிதாப் தஃப்ஸீருல் குர்ஆன் பாப் சூரத்துல் மாயிதா ஹதீஸ் எண் 3049)

சிஹாஹ் ஸித்தாவில் இடம் பெற்றுள்ள இந்த ஒருமித்த கருத்துகள் மட்டுமல்லாது வாழ்க்கை வரலாற்றை எழுதக்கூடிய நபர்களும் (அன்னாரின்) பல்வேறு ஒருமித்த கருத்துக்களை குறிப்பிட்டுள்ளனர். அந்த வகையில் அல்லாமா சுயூத்தி அவர்கள் சுமார் 20 சந்தர்ப்பங்களை குறிப்பிட்டுள்ளார்கள்

(தாரீகுல் குலஃபா பக்கம் 98 – 1999 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் கிதாபுல் அரபியில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: சஹாபிகளில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அந்தஸ்து எத்துனை மகத்தானது என்பதை நீங்கள் அறிவீர்களா? எந்த அளவுக்கென்றால் சில நேரங்களில் அன்னாரின் கருத்திற்கேற்பவே திருக்குர்ஆன் வசனம் இறங்கி வந்தது. மேலும் அன்னாருக்கு ஆதரவாக இந்த ஹதீஸும் உள்ளது. அதாவது ஷய்த்தான் உமரின் நிழலிலிருந்து விரண்டோடுகின்றான். எனக்குப் பிறகு ஒருவர் நபியாக இருப்பார் என்றால் அவர் உமராக இருப்பார் என்ற இரண்டாவது ஹதீஸும் உள்ளது. மூன்றாவதாக, இந்த ஹதீஸும் உள்ளது. அதாவது முந்தைய சமுதாயங்களில் முஹத்திஸ்கள் இருந்து வந்துள்ளனர். இந்த சமுதாயத்தில் ஒரு முஹத்திஸ் இருக்கின்றார் என்றால் அவர் உமர் ஆவார்.

(இஸாலா அவ்ஹாம், தொகுதி 1 ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 219)

போர்களில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆலோசனை வழங்கியது தொடர்பாகவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை ஒப்புக் கொள்வது தொடர்பாகவும் அறிவிப்பு கிடைக்கின்றது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அல்லது ஹஸ்ரத் அபூ சயீத் இருவரில் அறிவிப்பாளர் யாராக இருந்தார் என்பது பற்றி அஹ்மஷிற்கு சந்தேகம் உள்ளது. எவ்வாறிருப்பினும் அவர் கூறுகின்றார்: அவர்களிடமிருந்து இந்த அறிவிப்பு கிடைக்கின்றது. அதாவது தபூக் போரின் நாளன்று மக்களுக்கு கடுமையான பசி ஏற்பட்டிருந்தது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் எங்களுக்கு அனுமதி வழங்கினால் நாங்கள் தண்ணீர் கொண்டு வரக்கூடிய எங்களது ஒட்டகங்களை அறுத்து விடுவோம். மேலும் நாங்கள் அதனை உண்டு விடுவோம். மேலும் அதன் கொழுப்பை பயன்படுத்திக் கொள்வோம். செய்து கொள்ளுங்கள் என்று அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: அந்நிலையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வருகை தந்தார்கள். மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே!

தாங்கள் அவ்வாறு செய்து விட்டால் சவாரிகளின் எண்ணிக்கை குறைந்து விடும் என்று கூறினார்கள். ஆயினும் அவர்களது எஞ்சிய பயண உணவை கொண்டு வரும்படி மக்களுக்கு கட்டளையிடுங்கள். அதாவது யாரிடத்தில் என்னவெல்லாம் உணவுப் பொருள் உள்ளதோ அதைக் கொண்டு வரும்படி அவர்களிடம் கூறுங்கள். பின்னர் அவர்களுக்காக அதில் பரக்கத் ஏற்படுவதற்கு துஆ செய்யுங்கள். அல்லாஹ் அதில் பரக்கத்தை ஏற்படுத்தி விடுவது சாத்தியமாகும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஆம்! இது சரிதான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோலால் ஆன ஓர் உணவுத்தட்டை கொண்டு வரச் செய்தார்கள். அதை விரித்தார்கள். பின்னர் மக்களிடமிருந்த எஞ்சிய உணவுப் பொருட்களை கொண்டுவரும்படி செய்தார்கள். கிடைத்த உணவுப் பொருட்களை கொண்டு வரும்படி கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: ஒருவர் உள்ளங்கை நிறைய மக்கா சோளத்தை கொண்டு வந்தார். ஒருவர் உள்ளங்கை நிறைய பேரீத்தம் பழம் கொண்டு வந்தார். ஒருவர் ரொட்டித் துண்டுகளை கொண்டு வந்தார். எந்த அளவுக்கென்றால், அந்த உணவுத்தட்டில் அந்த உணவுப் பொருட்களில் ஓரளவு பகுதி ஒன்றுகூடி விட்டது.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதில் பரக்கத் ஏற்படுவதற்காக துஆ செய்தார்கள். பின்னர் உங்களது பாத்திரங்களை கொண்டு வாருங்கள் என்று கூறினார்கள். அவர்கள் அந்த பாத்திரங்களில் அவற்றை எடுத்துச் சென்றனர். எந்த அளவுக்கென்றால் படையில் எவரும் பாத்திரத்தை விட்டு விடவில்லை. ஆயினும் பாத்திரத்தை நிறைத்துக் கொண்டார். பின்னர் அனைவரும் உண்டனர். மன நிறைவு அடைந்தனர். ஓரளவு பொருட்கள் எஞ்சியும் விட்டன. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் சாட்சியம் வழங்குகின்றேன். அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் எவனும் இல்லை. நான் அல்லாஹ்வின் தூதர் ஆவேன். எந்த நபர் எவ்வித சந்தேகத்திற்கிடமின்றி இந்த இரண்டு சாட்சியங்களுடன் இறைவனை சந்திப்பாரோ அவர் சொர்க்கத்தில் நுழைவதிலிருந்து தடுக்கப்பட மாட்டார். இது முஸ்லிமின் அறிவிப்பாகும்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஈமான் ஹதீஸ் எண் 139)

புகாரியில் இந்த அறிவிப்பு இவ்வாறு பதியப்பட்டுள்ளது. யஸீத் பின் அபூ உபைதா அவர்கள் ஹஸ்ரத் சல்மா பின் அக்வா (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள். ஒரு பயணத்தில் மக்களிடம் வழிப்பாதை உணவு குறைந்து விட்டது. அவர்களிடம் எதுவும் எஞ்சியிருக்கவில்லை. அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தங்களது ஒட்டகங்களை அறுப்பதற்கு அனுமதி வேண்டி வந்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுமதி வழங்கி விட்டார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த மக்களை சந்தித்தார்கள். அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள். அப்போது நீங்கள் உங்களது ஒட்டகங்களை அறுத்து விட்டால் பின்னர் எப்படி வாழ்க்கையை கழிப்பீர்கள்? என்று கேட்டார்கள். இவ்வாறு கூறிவிட்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றார்கள்.

மேலும் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அவர்கள் தங்களது ஒட்டகங்களை அறுத்த பிறகு எப்படி வாழ்க்கையை கழிப்பார்கள்? என்று கேட்டார்கள். அப்போது அனைவரும் தங்களிடம் எஞ்சியுள்ள பயண உணவை கொண்டு வந்து விடும்படி மக்களிடம் அறிவிப்பு செய்வதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள். பின்னர் அந்த வழிப்பாதை உணவில் பரக்கத் ஏற்பட்டது. அடுத்து அவர்களின் பாத்திரங்களை கொண்டு வந்தார்கள். மக்கள் பாத்திரங்களை நிறைக்க தொடங்கி விட்டார்கள். எந்த அளவுக்கென்றால், அவர்கள் சென்ற பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் சாட்சியம் வழங்குகின்றேன். அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை. நான் அல்லாஹ்வின் தூதர் ஆவேன்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஜிஹாத்... ஹதீஸ் எண் 2982)

பாங்கின் தொடக்கம் குறித்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கனவு கண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் வஹீ சஹாபா பெருமக்கள் மீது இறங்கியது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் அப்துல்லாஹ் பின் ஸைது என்ற ஒரு சஹாபி இருந்தார். அல்லாஹ் அவர்களுக்கு வஹீயின் மூலமாக பாங்கு கற்றுக் கொடுத்திருந்தான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த வஹீயை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம்களிடத்தில் பாங்கிற்கான நடைமுறையை ஏற்படுத்தினார்கள். பின்னர் திருக்குர்ஆன் வஹீயும் அதனை உண்மைப்படுத்தியது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கும் இறைவன் இதே பாங்கை கற்றுக் கொடுத்துள்ளான். ஆனால் 20 நாள் வரை நான் அமைதியாக இருந்தேன். வேறொருவர் இந்த விஷயத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறி இருப்பார் என்று கருதி நான் மௌனமாக இருந்தேன்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறும் வருகின்றது. அதாவது ஒரு வானவர் வந்து எனக்கு பாங்கை கற்றுக் கொடுத்தார். நான் அப்போது முழுமையாக தூங்கியிருக்கவில்லை. சற்று விழித்திருந்தேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(மஸ்அலா வஹீ வ நுபுவ்வத் கே முதஅல்லிக் இஸ்லாமி நஸரிய்யா, அன்வாருல் உலூம் தொகுதி 23 பக்கம் 282)

சுனன் திர்மிதியிலுள்ள அறிவிப்பை நான் முன்னரும் எடுத்துக் கூறியுள்ளேன். ஆனால் இங்கும் கூறி விடுகின்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பார்வையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கனவு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது என்பதை அதன் கடைசியிலுள்ள சொற்கள் எடுத்துரைக்கின்றன.

முஹம்மது பின் அப்துல்லாஹ் பின் ஸைது தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள். நாங்கள் காலை நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தோம். நான் அன்னாரிடம் கனவை கூறினேன். நிச்சயமாக இது உண்மையான கனவு ஆகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நீங்கள் பிலாலுடன் செல்லுங்கள். நிச்சயமாக அவர் உங்களை விட உரத்த குரலுடையவர் ஆவார். அவரிடம் உங்களுக்கு கூறப்பட்டதை கூறுவீராக. எனவே அவர் அதனை அறிவிக்கட்டும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அன்னார் (ரலி) அதாவது அப்துல்லாஹ் பின் ஸைது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தொழுகைக்காக ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களின் பாங்கை கேட்டபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது போர்வையை இழுத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தங்களை உண்மையுடன் அனுப்பிய அல்லாஹ்வின் மீது ஆணையாக! நிச்சயமாக இவர் பாங்கில் கூறிய அதே விஷயங்களை நானும் பார்த்தேன் என்று அன்னார் (ரலி) அவர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனவே எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே உரியன. ஆக இந்த விஷயம் மிகவும் உறுதியானதாகும் என்று கூறினார்கள்.

(சுனன் திர்மிதி, கிதாபுஸ் ஸலாத் பாப் மாஜாஅ ஃபில் பத்வுல் அஸான் ஹதீஸ் எண் 189)

அதாவது இனி மேற்கொண்டு எந்த ஆதாரத்திற்கும் அவசியமில்லை.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எவ்வாறு கண்ணியப்படுத்தியும், மரியாதை செலுத்தியும் வந்தார்கள்? அன்னாரின் பார்வையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு என்ன அந்தஸ்து இருந்தது? இது தொடர்பாக ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அன்னார் அதாவது ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஒரு பயணத்தில் இருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஓர் ஒட்டகத்தில் சவாரி செய்திருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட அன்னாரின் சவாரி முந்திக் கொண்டு சென்று கொண்டிருந்தது. அப்போது அன்னாரின் தந்தையார் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அப்துல்லாஹ்வே! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட எவரும் முந்திக் கொண்டு செல்லக்கூடாது. உங்களின் இந்த ஒட்டகம்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒட்டகத்தை முந்திக் கொண்டு செல்லக்கூடாது என்று கூறிக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், என்னிடத்தில் இதனை விற்று விடுங்கள் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இது தங்களுடையதுதான் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை விலைக்கு வாங்கிக் கொண்டார்கள். அதன் பிறகு கூறினார்கள்: அப்துல்லாஹ்வே! இனி இது உம்முடையதுதான். அதனைக் கொண்டு நீர் விரும்பிய படி பணி வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஹிபா.... ஹதீஸ் எண் 2610)

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சூரியன் உச்சியில் இருந்தபோது வருகை தந்தார்கள். லுஹர் தொழுகையை தொழுதார்கள். மேடை மீது ஏறினார்கள். வாக்களிக்கப்பட்ட நேரத்தைப் பற்றி குறிப்பிட்டார்கள். அதில் பெரும் பெரும் சம்பவங்கள் அரங்கேறும் என்று கூறினார்கள். பின்னர் எவர் என்ன கேட்க விரும்பினாலும் கேட்டுக் கொள்ளட்டும் என்று கூறினார்கள். நான் இந்த இடத்தில் இருக்கும் வரை நீங்கள் என்ன கேட்டாலும் நான் உங்களுக்கு கூறுவேன் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியபோது மக்கள் மிகவும் அழுதனர். என்னிடம் கேட்டுக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பல முறை கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஹுஸாபா எழுந்து நின்றார். மேலும் எனது தந்தை யார்? என்று கேட்டார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹுஸாஃபா என்று கூறினார்கள். பின்னர் என்னிடம் கேட்டுக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பல முறை கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது முழங்காலிட்டு நின்று கொண்டார்கள். பின்னர் رَضِيْنَا بِاللهِ رَبًّا وَبِالْإِسْلَامِ دِيْنًا، وَبِمُحَمَّدٍ نَبِيًّا என்று கூறினார்கள். அல்லாஹ் எங்களது இறைவன் என்பதிலும், இஸ்லாம் எங்களது மார்க்கம் என்பதிலும், முஹம்மது (ஸல்) எங்களது தூதர் என்பதிலும் நாங்கள் திருப்தி கொண்டுள்ளோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மௌனமாகி விட்டார்கள். பின்னர் சொர்க்கமும், நெருப்பும் தற்போது அகலமான சுவரின் வடிவில் என் முன்னால் காட்டப்பட்டது. நான் அதுபோன்ற நன்மை, தீமையை ஒருபோதும் கண்டதில்லை என்று கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி... ஹதீஸ் எண் 540)

புகாரியின் மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு குறிப்பு கிடைக்கின்றது. ஹஸ்ரத் அபூ மூஸா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அன்னார் விரும்பாத சில விஷயங்கள் பற்றி கேட்கப்பட்டது. அன்னார் (ஸல்) அவர்களிடம் அதிகமான கேள்விகள் கேட்கப்பட்டன. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கோபம் வந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களிடம் கூறினார்கள்: எதைப் பற்றி வேண்டுமானாலும் என்னிடம் கேட்டுக் கொள்ளுங்கள். அப்போது எனது தந்தை யார்? என்று ஒருவர் கேட்டார். உமது தந்தை ஹுஸைஃபா ஆவார் என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதன் பிறகு மற்றொருவர் எழுந்தார். அவர் கூறினார்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனது தந்தை யார்? என்று கேட்டார். அதற்கு உமது தந்தை ஷைபாவால் விடுதலை செய்யப்பட்ட அடிமை சாலிம் ஆவார் என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்திலிருந்த அந்த மாற்றத்தை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கண்டபோது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் கண்ணியமும், கம்பீரமிக்க இறைவனின் சந்நிதானத்தில் எங்களது தவறுகளிலிருந்து முகம் திருப்புகின்றோம் என்று கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் இல்ம்... ஹதீஸ் எண் 92)

அடுத்து புகாரியின் மற்றோர் அறிவிப்பும் உள்ளது. அதனை ஸுஹரி அவர்கள் அறிவிக்கின்றார்கள். அதில் வருகின்றது. அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் என்னிடம் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளியே புறப்பட்டார்கள். அப்போது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஹுஸைஃபா எழுந்து நின்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனது தந்தை யார்? என்று கேட்டார். அப்போது உமது தந்தை ஹுஸைஃபா ஆவார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் கேட்டுக் கொள்ளுங்கள் என்று பல முறை கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முழங்காலில் நின்று கொண்டு அல்லாஹ் எங்களது இறைவன் ஆவான் என்பதிலும், இஸ்லாம் எங்கள் மார்க்கமாகும் என்பதிலும், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் எங்களது தூதர் ஆவார்கள் என்பதிலும் நாங்கள் திருப்தி கொண்டுள்ளோம் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மௌனமாகி விட்டார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் இல்ம்... ஹதீஸ் எண் 93)

ஹஸ்ரத் அபூகத்தாதா அன்ஸாரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அன்னாரின் நோன்புகளைக் குறித்து கேள்வி கேட்கப்பட்டது. அறிவிப்பாளர் கூறுகின்றார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதிருப்தி அடைந்தபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். நாங்கள் அல்லாஹ் எங்களது இறைவன் என்பதிலும், இஸ்லாம் எங்களது மார்க்கம் என்பதிலும், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) எங்கள் தூதர் என்பதிலும், எங்களது பைஅத் உண்மையான பைஅத் என்பதிலும் நாங்கள் திருப்தி அடைந்துள்ளோம்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுஸ் ஸியாம், பாப் இஸ்திஜாபுஸ் ஸியாம்.. ஹதீஸ் எண் 2747)

சஹீஹ் புகாரியில் ஓர் அறிவிப்பு வருகின்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேல் தளத்தில் இருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றேன். அப்போது அன்னார் (ஸல்) அவர்கள் பாயில் படுத்திருந்தார்கள். அன்னாருக்கும், பாய்க்கும் மத்தியில் எந்த விரிப்பும் இல்லாமல் இருந்தது. எனவே பாயானது அன்னாரின் முதுகுப் பக்கத்தில் சுவடுகளை ஏற்படுத்தி இருந்தது. ஒரு தோலின் தலையணையில் அன்னார் சாய்ந்திருந்தார்கள். அதில் பேரீத்தம் பழ மரத்தின் தழைகள் நிறைந்திருந்தது.

நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீட்டின் பக்கம் பார்வையை உயர்த்தி கண்டேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அங்கு மூன்று காய்ந்த தோல்களை தவிர வேறு எந்தவொரு பொருளும் எனக்கு தென்படவில்லை. நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் கூறினேன்: அல்லாஹ்விடம் தாங்கள் தங்களின் சமுதாயத்தின் செழிப்பிற்காக துஆ செய்யுங்கள். ஏனென்றால் பாரசீகம் மற்றும் ரோமிற்கு அதிகமான செல்வம் வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு உலகம் கிடைத்துள்ளது. ஆயினும் அவர்கள் அல்லாஹ்வை வணங்குவதில்லை.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சாய்ந்து அமர்ந்திருந்தார்கள். கத்தாபின் மகனே! உமக்கு இன்னும் சந்தேகம் உள்ளதா? அவர்கள் எப்படிப்பட்ட மக்கள் என்றால் மிக விரைவாக இந்த உலகிலேயே இந்த இன்பத்திற்கான பொருட்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டு விட்டன. நான் கூறினேன்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனது பாவமன்னிப்பிற்காக துஆ செய்யுங்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மஸாலிம்... ஹதீஸ் எண் 2468)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு முறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்னார் (ஸல்) அவர்களின் வீட்டிற்கு வந்தார்கள். மேலும் வீட்டில் எந்த பொருட்களும் இல்லை என்பதையும், மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு பாயில் படுத்திருப்பதையும், பாயின் அடையாளங்கள் முதுகில் ஏற்பட்டிருப்பதையும் கண்டார்கள். அப்போது இந்த நிலைமையைப் பார்த்து உமருக்கு அழுகை வந்து விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உமரே! நீர் எதற்காக அழுகின்றீர்? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: தங்களின்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும்
என்னை வணங்குவதற்காகவே
படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே
துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Melapalayam)

வேதனையைப் பார்த்து எனக்கு அழுகை வந்து விட்டது. நிராகரிப்பாளர்களான கைஸரும், கிஸ்ராவும் சுக போகமான வாழ்க்கையை கழித்து வருகின்றனர். (ஆனால்) தாங்கள் இந்த கஷ்டங்களில் வாழ்க்கையை கழிக்கின்றீர்கள். இதை எண்ணி எனக்கு அழுகை வந்து விட்டது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனக்கு இந்த உலகத்தோடு என்ன பணி உள்ளது? எனது உதாரணம் அந்த பயணியைப் போன்றதாகும். அதாவது கடுமையான வெப்பத்தின் நேரத்தில் அவர் ஒரு பெண் ஒட்டகத்தில் சவாரி செய்து கொண்டு செல்கின்றார். பிற்பகலின் வெப்பம் அவருக்கு அதிக துன்பம் தந்தபோது அவர் அதே சவாரியின் நிலையில் மூச்சு வாங்குவதற்காக ஒரு மரத்தின் நிழலின் கீழ் நின்று விட்டார். பின்னர் சில நிமிடத்திற்குப் பிறகு அதே வெப்பத்தில் தனது பயணத்தை தொடர்ந்தார்.

(செஷ்மா மஃரூஃபத், ரூஹானி கஸாயின் தொகுதி 23 பக்கம் 299, 300)

ஒரு சம்பவம் வருகின்றது. அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் துஆவிற்காக கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் உம்ராவை நிறைவேற்றுவதற்காக அனுமதி வேண்டியபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு அனுமதி நல்கினார்கள். மேலும் لَا تَنْسَنَا يَا أُخَيَّ مِنْ دُعَائِكَ அதாவது எனது சகோதரரே! எம்மை உமது துஆவில் மறந்து விட வேண்டாம் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கு இந்த கூற்றிற்கு பகரமாக முழு உலகமும் கிடைத்திருந்தாலும் இவ்வளவு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்காது. இது அப்படிப்பட்ட கூற்றாகும்.

மற்றொரு அறிவிப்பில் இந்த சொற்கள் أَشْرِكْنَا يَا أُخَيَّ فِي دُعَائِكَ என்று வருகின்றன. அதாவது எனது சகோதரனே! எம்மை உமது துஆவில் சேர்த்துக் கொள்ளவும்.

(சுனன் அபூதாவூது, கிதாபுல் வித்ர் பாப் துஆ ஹதீஸ் எண் 1498)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது எந்த அளவிற்கு பேரன்பு கொண்டிருந்தார்கள்? என்பது இந்த சம்பவத்திலிருந்து தெரிய வருகின்றது. முன்னரும் ஒரு குத்பாவில் எடுத்துரைத்துள்ளேன். இது தொடர்பாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டபோது அந்த செய்தியைக் கேட்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். மேலும் அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணிக்கவில்லை என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள். இறைவன் மீது ஆணையாக! எனது உள்ளத்தில் இதே விஷயம் தான் வந்துள்ளது என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள். அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நிச்சயமாக எழுப்புவான் என்றே அன்னார் கூறினார்கள். அதாவது அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சில மனிதர்களின் கை, கால்களை வெட்டுவதற்காக கண்டிப்பாக எழுப்புவான் என்று கூறினார்கள். எவ்வாறிருப்பினும் பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்தபோது அன்னார் சூரா ஆலி இம்ரானின் 145 வது வசனத்தை ஓதினார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை உண்மையை புரிந்து கொள்ளும்படி கூறினார்கள். பின்னர் விவகாரம் முடிவுக்கு வந்தது.

(சஹீஹுல் புகாரி, கிதாபு ஃபலாயில் அஸ்ஹாபுன் நபி (ஸல்)... ஹதீஸ் எண்3667, 3668)

இது பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்தின்போது அனைத்து நபிமார்களும் மரணமடைந்து விட்டார்கள் என்ற விவகாரத்தின் மீதே அனைத்து சஹாபிகளின் இஜ்மா (ஒருமித்த கருத்து) அமைந்திருந்தது. அதற்குரிய காரணம் என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்தின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இன்னும் உயிருடன் உள்ளார்கள். மீண்டும் வருகை தருவார்கள் என்ற எண்ணம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஏற்பட்டிருந்தது. அன்னார் (ரலி) அவர்கள் தமது இந்த கொள்கையில் எந்த அளவிற்கு நம்பிக்கை கொண்டிருந்தார்கள் என்றால் எவர் இதற்கு எதிராக கூறுவாரோ அவரின் தலையை துண்டிப்பதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆயத்தமாக இருந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் வருகை தந்து அனைத்து சஹாபிகளுக்கு முன்னிலையிலும் அன்னார் وَمَا مُحَمَّدٌ إِلَّا رَسُولٌ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ என்ற வசனத்தை ஓதினார்கள்.

அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனது கால்கள் நடுங்கி விட்டன. நான் துக்கத்தால் வீழ்த்தப்பட்டு பூமியில் விழுந்து விட்டேன். சஹாபா (ரிஸ்வானுல்லாஹ்...) அவர்கள் கூறுகின்றனர்: இந்த வசனம் இன்று தான் இறங்கியதுபோன்று எங்களுக்கு தோன்றியது. மேலும் நாங்கள் அந்த நாளன்று அந்த வசனத்தை கடை வீதிகளில் ஓதிக் கொண்டு சுற்றிக் கொண்டிருந்தோம். ஒரு நபி மட்டும் உயிருடன் இருந்திருந்து பின்னர் (ஏனைய) அனைத்து நபிமார்களும் மரணித்திருக்கும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏன் மரணித்திருக்கக்கூடாது? என்ற வாதம் சரியானதாக இருக்க முடியாது. தாங்கள் (ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி)) ஏன் ஏமாற்றுகின்றீர்கள்? ஹஸ்ரத் மஸீஹ் இன்னும் வானத்தில் உயிருடன் இருக்கின்றார் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறியிருக்க முடியும். அவர் உயிருடன் இருக்கும்போது ஏன் நமது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உயிருடன் இருக்கக்கூடாது? என்ற கேட்டிருப்பார்கள். ஆனால் அனைத்து சஹாபா பெருமக்களின் மௌனமும் இந்த விஷயத்தை வலியுறுத்திக் கூறுகின்றது. அதாவது ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்பதே அனைத்து சஹாபிகளின் மார்க்கமாக இருந்தது.

(தஹ்ஃபத்துல் மலூக், அன்வாருல் உலூம் தொகுதி 2 பக்கம் 128)

இது பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் கூறுகின்றார்கள்: அதன் விளக்கத்தை முந்தைய ஒரு குத்பாவில் நான் எடுத்துரைத்துள்ளேன். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றி வந்தார்கள்? இது பற்றி ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரே அஸ்வதை (கருங்கல்லை) நோக்கி முகம் திருப்பினார்கள். பின்னர் தனது உதடுகளை அதன் மீது வைத்து சற்று நேரம் வரை அழுது கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திரும்பிப் பார்த்தபோது ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களும் அழுது கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உமரே! இது எப்படிப்பட்ட இடம் என்றால் இங்கு கண்ணீர் சிந்தப்படுகின்றது.

(சுனன் இப்னு மாஜா, கிதாபுல் மனாஸிக்... ஹதீஸ் எண் 2945)

ஆபஸ் அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: அன்னார் ஹிஜ்ரே அஸ்வதிற்கு அருகில் வந்தார்கள். மேலும் அதனை முத்தமிட்டார்கள். நான் நன்றாக அறிவேன். நீ ஒரு கல் மட்டுமே ஆவாய். உன்னால் பாதிப்பையும் ஏற்படுத்த முடியாது. நன்மையும் ஏற்படுத்த முடியாது என்று அன்னார் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உன்னை முத்தமிட்டதை நான் பார்க்காமல் இருந்திருந்தால் நானும் ஒருபோதும் உன்னை முத்தமிட்டிருக்க மாட்டேன் என்று அன்னார் (ரலி) கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஹஜ் பாப் மா ஸிக்க் ஃபில் ஹஜ்ருல் அஸ்வத் ஹதீஸ் எண் 1597)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு முறை தவாஃப் செய்து கொண்டிருந்தார்கள். அப்போது அன்னார் (ரலி) ஹிஜ்ரே அஸ்வதை கடந்து கொண்டிருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் அதன் மீது தனது தடியால் தட்டினார்கள். மேலும் கூறினார்கள்: நீ ஒரு கல் ஆவாய் என்பதையும், உன்னிடம் எந்த ஆற்றலும் இல்லை என்பதையும் நான் அறிவேன். ஆனால் இறைவனின் கட்டளையின் கீழ் நான் உன்னை முத்தமிடுகின்றேன். இந்த ஏகத்துவ சிந்தனை தான் அன்னாரை உலகத்தின் மிகவும் உயர்ந்த நிலைக்கு கொண்டு சென்றது. அன்னார் ஏக இறைவனின் ஏகத்துவத்தின் முழுமையான பேரன்புமிக்கவராக இருந்தார்கள். இறைவனின் ஆற்றலை வேறொருவருக்கு இணையாக்குவதை அன்னாரால் ஒருபோதும் சகித்துக் கொள்ள முடியாது. நிச்சயமாக அன்னார் ஹிஜ்ரே அஸ்வதிற்கும் மரியாதை வழங்கி வந்தார்கள்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)

ஆனால் இறைவன் அதனை கண்ணியப்படுத்தும்படி கூறியுள்ளான் என்பதாலேயே ஆகும். மற்றபடி ஹிஜ்ரே அஸ்வதின் உள்ளே ஏதும் தனிச்சிறப்பு உள்ளது என்பதால் அன்னார் அதற்கு கண்ணியம் அளிக்கவில்லை. இழிவிலும் இழிவான ஒரு பொருளை முத்தமிடுவதற்கு இறைவன் கட்டளை வழங்கி விட்டால் பின்னர் நாம் அதனை முத்தமிடுவதற்கும் ஆயத்தமாக இருக்கின்றோம். ஏனென்றால் நாம் இறைவனின் அடியார்கள் ஆவோம். ஒரு கல் அல்லது வீட்டின் அடியார்கள் அல்ல. எனவே அன்னார் மரியாதையும் செலுத்தி வந்தார்கள். மேலும் ஏகத்துவத்தையும் அன்னார் புறக்கணிக்காமல் இருந்தார்கள். இதுவே ஓர் உண்மையான நம்பிக்கையாளரின் அந்தஸ்து ஆகும்.

ஓர் உண்மையான நம்பிக்கையாளர் இதேபோன்று தான் பைத்துல்லாஹ்வை கற்களாலான ஒரு வீடாக கருதுகின்றார். எவ்வாறு உலகில் இன்னும் ஆயிரக்கணக்கான வீடுகள் கற்களால் ஆகியுள்ளனவோ அதேபோன்று அதையும் ஒரு வீடாக கருதுகின்றார். ஓர் உண்மையான நம்பிக்கையாளர் எவ்வாறு உலகில் இன்னும் கோடிக்கணக்கான கற்கள் உள்ளனவோ அதுபோன்ற ஒரு கல்லாகவே ஹிஜ்ரே அஸ்வதை அவர் கருதுகின்றார். ஆனால் அவர் பைத்துல்லாஹ்விற்கும் கண்ணியம் வழங்குகின்றார். மேலும் அவர் ஹிஜ்ரே அஸ்வதையும் முத்தமிடுகின்றார். ஏனென்றால் எனது இறைவன் ,இந்த விஷயங்களுக்கு கண்ணியமளிக்கும்படி கட்டளை வழங்கியுள்ளான் என்பதை அவர் அறிகின்றார். அவர் அந்த வீட்டிற்கு மரியாதை செலுத்துகின்றார். மேலும் அவர் ஹிஜ்ரே அஸ்வதை முத்தமிடுகின்றார். இருந்தபோதிலும் நான் இறைவனின் அடியான் ஆவேன் என்ற உறுதியில் முழு மனதுடன் நிலைநிற்கின்றார்.

இதுவே உண்மையாக இருந்தது. அதாவது நான் ஏக இறைவனின் அடியானே தவிர வேறு எவருக்கும் எந்த அந்தஸ்தும் இருப்பதாக நான் கருதவில்லை. கோடிக்கணக்கான கற்கள் உலகத்தில் இருப்பதைப் போன்றே நீயும் ஒரு கல் மட்டுமே ஆவாய். ஆனால் உனக்கு கண்ணியம் வழங்க வேண்டும் என்று எனது இறைவன் கூறினான். எனவே நான் கண்ணியம் வழங்குகின்றேன். இவ்வாறு கூறிவிட்டு அன்னார் (ரலி) முன்னால் சென்றார்கள். மேலும் அந்த கல்லை முத்தமிட்டார்கள்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 10 பக்கம் 130)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வினவினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாயிஃப் நகரத்திலிருந்து திரும்பி வந்த பிறகு ஜிஹ்ரான் என்ற இடத்தில் இருந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் அறிவீனமான காலத்தில் மஸ்ஜித் ஹராமில் ஒரு முறை இஃதிகாஃப் இருப்பதற்கு எண்ணம் கொண்டிருந்தேன். தங்களின் வழிகாட்டுதல் என்ன? என்று அன்னார் கேட்டார்கள். செல்லுங்கள். சென்று ஒரு நாள் இஃதிகாஃப் அமருங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும் ஆகுமான எண்ணங்கள் எவை இருக்குமோ அவை எந்த காலத்திலும் நிகழ்ந்திருந்தாலும் சரியே. அதை முழுமை செய்ய வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த பாடத்தை வழங்கியுள்ளார்கள்.

பின்னர் அறிவிப்பாளர் கூறுகின்றார்: ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருக்கு 1/5 (போர் செல்வத்தின்) பங்கிலிருந்து ஒரு பெண்ணை வழங்கினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களின் கைதிகளை விடுதலை செய்தார்கள். எங்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விடுதலை செய்து விட்டார்கள் என்ற அவர்களின் குரலை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டிருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் என்ன விஷயம்? என்று கேட்டார்கள். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மக்களின் கைதிகளை விடுதலை செய்து விட்டார்கள் என்று கூறினர். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது மகனிடம், அப்துல்லாஹ்வே! நீர் இந்த பெண்ணிடம் செல்வீர். அவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழங்கியுள்ளார்கள். மேலும் அவரை விடுதலை செய்து விடுவீராக என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஈமான்.... ஹதீஸ் எண் 4294)

ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இரகசிய காப்பாளராக இருந்தார்கள் என்று கூறப்படுகிறது. தபூக் போருக்கு மத்தியில் இவ்வாறு ஒரு சம்பவம் நிகழ்ந்தது. ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது சவாரியிலிருந்து கீழே இறங்கினார்கள். அந்த நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது வஹீ இறங்கியது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமர்ந்திருந்த சவாரி எழுந்து நின்று விட்டது. மேலும் அது முஹாஜிர்களை ஈர்க்கத் தொடங்கியது. நான் அதன் சாட்டையை பிடித்து விட்டேன். நான் அதனை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தேன். பின்னர் நான் மட்டும் அந்த ஒட்டகத்தின் பக்கம் அமர்ந்து கொண்டேன். எந்த அளவுக்கென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எழுந்து விட்டார்கள். நான் அந்த பெண் ஒட்டகத்தை அன்னாரிடம் கொண்டு வந்தேன். யார் அது? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். நான் ஹுஸைஃபா என்று பதிலளித்தேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் உமக்கு ஒரு இரகசியத்தை தெரியப்படுத்த உள்ளேன். நீர் அதனை எவரிடத்திலும் குறிப்பிட வேண்டாம். நான் இன்ன இன்ன நபர்களின் ஜனாஸா தொழுகையை தொழ வைப்பதிலிருந்து தடுக்கப்பட்டுள்ளேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நயவஞ்சகர்களின் ஒரு கூட்டத்தின் பெயரை கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் ஒரு நபர் மரணமடைந்து விட்டால் அவர் நயவஞ்சகர்களின் கூட்டத்தை சார்ந்தராக இருக்கின்றார் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரைக் குறித்து கருதினால் அவரின் ஜனாஸா தொழுகையை தொழ வைப்பதற்காக, அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்களின் கரத்தைப் பிடித்து தம்முடன் அழைத்துச் செல்வார்கள். ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அன்னாருடன் வந்து விட்டால் அந்த நபரின் ஜனாஸா தொழுகையை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தொழ வைப்பார்கள். ஒருவேளை ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்கள் தமது கையை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கரத்திலிருந்து விடுவித்துக் கொண்டால் பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த நபரின் ஜனாஸா தொழுகையை விட்டு விடுவார்கள் (தொழ வைக்க மாட்டார்கள்).

(அஸ்ஸீரத்துல் ஹல்பியா தொகுதி 3 பாகம் 1 பக்கம் 440, 441 – 2007 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பை வெளிப்படையாக முழுமை செய்தது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உண்மை மற்றும் தூய்மையால் நிறைந்திருந்த ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த இன்பத்தை கண்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குப் பிறகு இரண்டாவது கலீஃபாவாக ஆனார்கள். சுருக்கமாக, இவ்வாறு ஒவ்வொரு சஹாபியும் முழுமையான கண்ணியத்தை பெற்றார். கைஸர் மற்றும் கிஸ்ராவின் செல்வங்களும் அரசவைப் பொருட்களும் அவர்களின் கரங்களுக்கு வந்தன.

சம்பவம் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஒரு சஹாபி கிஸ்ராவின் அவைக்கு சென்றார். கிஸ்ரா பேரரசனின் ஊழியர்கள் வெள்ளியாலான நாற்காலியை அமர்வதற்காக போட்டார்கள். மேலும் தமது மேன்மைகளையும், சிறப்புகளையும் அவர்கள் வெளிப்படுத்தினர். அப்போது அந்த சஹாபி நாங்கள் இந்த செல்வத்தின் மீது ஆசை கொள்வதில்லை. கிஸ்ராவின் (தங்க) காப்புகளும் எங்களின் கரத்திற்கு வந்து விடும் என்று (ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளதாக) கூறினார். எனவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த காப்பை அந்த முன்னறிவிப்பு நிறைவேற வேண்டும் என்ற விதத்தில் ஒரு சஹாபிக்கு அணிவித்து விட்டார்கள்.

(மல்ஃபூஃஸாத் தொகுதி 2 பக்கம் 46)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: தங்கம் அணிவது ஆண்களுக்கு ஆகுமானதல்ல. ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கிஸ்ராவின் காப்பை ஒரு சஹாபிக்கு அணிவித்தார்கள். அவர் அதனை அணிய மறுத்தபோது அவரை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கண்டித்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உமது கரங்களில் எனக்கு கிஸ்ராவின் காப்புகள் தென்படுகின்றன என்று கூறியுள்ளார்கள் என ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

இதேபோன்று ஒரு சந்தர்ப்பத்தில் கிஸ்ராவின் மகுடமும், அவனது பட்டாடையும் போர் செல்வங்களாக வந்தபோது ஹஸ்ரத் உமர் (ரலி)

அவர்கள் அந்த ஆடையையும், மகுடத்தையும் அணியும்படி ஒரு நபருக்கு கட்டளையிட்டார்கள். அவர் அணிந்து கொண்டபோது அன்னார் (ரலி) அவர்கள் அழுது விட்டார்கள். சில நாட்கள் கழிந்திருந்தன. அன்னார் கூறினார்கள்: கிஸ்ரா பேரரசர் இந்த ஆடையை அணிந்து கொண்டும், இந்த மகுடத்தை தலையில் சூட்டிக் கொண்டும் ஈரான் நாட்டில் அநீதியான ஆட்சி நடத்தி வந்தார். ஆனால் இன்று அவர்கள் காடுகளில் ஒடிக் கொண்டுள்ளார்கள். உலகத்தின் நிலை இவ்வாறு உள்ளது. மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இந்த செயல் வெளிப்படையான பார்வை கொண்ட மனிதனுக்கு ஒருவேளை தவறாக தோன்றலாம். ஏனென்றால் பட்டாடையும், தங்கமும் அணிவது ஆண்களுக்கு ஆகுமானதல்ல. ஆனால் ஒரு நல்ல விஷயத்தை புரிய வைப்பதற்காகவும், அறிவுரை செய்வதற்காகவும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு நபருக்கு சில நிமிடத்திற்காக தங்கம் மற்றும் பட்டாடையை அணிவிக்கச் செய்தார்கள்.

சுருக்கமாக, அசல் விஷயம் அல்லாஹ்வின் மீதான அச்சமாகும். அல்லாஹ்வின் மீதான அச்சத்தை உருவாக்குவதற்காகவே அனைத்து கட்டளைகளும் அமைகின்றன. அல்லாஹ்வின் மீதான அச்சத்தை பெறுவதற்காக எந்தவொரு விஷயத்தையும் அது இறைவணக்கத்தின் வடிவில் இருந்தால் பின்னர் அதற்கெதிரான விஷயத்தை வெளிப்படையில் அது இறைவணக்கமாக தெரிந்தாலும் அதை விட்டு விட நேரிட்டால் விட்டு விடுவதே நற்கூலிக்கு காரணியாக அமையும்.

(ஏக் சாஹிப் கே பான்ச் சவாலூன் கா ஜவாப், அன்வாருல் உலூம் தொகுதி 3 பக்கம் 28)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனக்கு கனவில் காட்டப்பட்டுள்ளது. நான் ஒரு கிணற்றில் கயிறால் கட்டப்பட்டிருந்த வாளியால் தண்ணீர் இரைத்துக் கொண்டிருந்தேன். இதற்கிடையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்தார்கள். அன்னார் ஒன்று அல்லது இரண்டு வாளியால் தண்ணீரை இவ்வாறு இரைத்தார்கள். அதாவது அவற்றை இரைப்பதில் (அன்னாருக்கு) பலவீனம் இருந்தது. அல்லாஹ் அவர்களின் பலவீனத்தின் மீது திரையிடுவான். மேலும் அன்னாரை மன்னிப்பான் என்று தோன்றியது. பின்னர் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் வந்தார்கள். அந்த வாளி பெரிய வாளியாக மாறி விட்டது. அதுபோன்று ஆச்சரியம் அளிக்கத்தக்க, பணி செய்யக்கூடிய எந்தவொரு நபரையும் பார்த்ததில்லை. எந்த அளவுக்கென்றால் மக்கள் திருப்தியடைந்து விடும் அளவிலும் தத்தமது இடங்களுக்கு சென்று அமர்ந்து விடும் அளவிலும் தண்ணீர் இரைக்கப்பட்டு விட்டது.

(சஹீஹுல் புகாரி, கிதாப் ஃபளாயிலுன் நபி (ஸல்) பாப் மனாகிப் உமர் பின் கத்தாப் ஹதீஸ் எண் 3682)

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து இதை செவியுற்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறி இருந்தார்கள். அதாவது ஒரு முறை நான் தூங்கிக் கொண்டிருந்தேன். இதற்கிடையில் என்னிடத்தில் ஒரு பால் குவளை கொண்டு வரப்பட்டது. நான் எந்த அளவிற்கு பால் குடித்தேன் என்றால் எனது நகங்களிலிருந்து அதன் ஈரப்பதம் பீறிட்டதை நான் கண்டேன். பின்னர் நான் எஞ்சியிருந்த எனது பாலை ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களுக்கு கொடுத்தேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் இதற்கு என்ன விளக்கம் அளிக்கின்றீர்கள்? என்று சஹாபிகள் கேட்டனர். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிவு என்று பதிலளித்தார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் இல்ம் பாப் பஸ்லுல் இல்ம் ஹதீஸ் எண் 82)

ஹஸ்ரத் ஜைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷா சாஹிப் (ரலி) அவர்கள் இந்த ஹதீஸிற்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள்: ஃபஸ்லுல் இல்ம் என்பதற்கு இந்த இடத்தில் அறிவின் மேன்மை என்பது பொருளல்ல. மாறாக, அறிவின் எஞ்சியுள்ள பகுதி என்பதாகும். அறிவின் மேன்மை குறித்து தனியாக பாடம் அமைக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கனவுகள் மற்றும் அதன் விளக்கங்களிலிருந்தும் மேலும் இந்த கனவின் உண்மைப்படுத்தும் சம்பவங்களிலிருந்தும் இந்த கருத்தை நிலைநிறுத்துவது நோக்கமாகும். அதாவது உலகியல் வெற்றிகளும், மேன்மைகளும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மூலமாக கிடைத்தன. அவை நபித்துவ அறிவில் எஞ்சியிருந்த ஒரு பகுதியாக இருந்தது. அது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து கிடைத்திருந்தது. திருக்குர்ஆனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இதன் காரணத்தால் மஜ்மவுல் பெஹ்ரைன் (இரு கடல்களின் திரல்) என்று அழைக்கப்படுகின்றது. அதாவது உலகம் மற்றும் மறுமையின் முன்னேற்றங்களின் அறிவுகளின் தொகுப்பு என்பது பொருள் அகும்.

இமாம் புகாரி (ரஹ்) அவர்கள் அரசியலை சிறப்பான அறிவில் இணைத்து இந்த விஷயத்தை சுட்டி காட்டியுள்ளார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழுமையான நேர்வழியை கொண்டு வந்தார்கள். அது மனிதனின் ஈருலக செல்வங்களை விட மேன்மையானதாகும். மஸீஹ் (அலை) அவர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் குறித்து இவ்வாறு முன்னறிவிப்பு செய்துள்ளார். அதாவது அந்த சத்திய ஆவி வரும்போது முழுமையான உண்மையை கொண்டு வரும்.

(யோவான் தொகுதி 16 வசனம் 12,13)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சம்பவங்களை படிப்பதிலிருந்து அந்த எஞ்சியுள்ள பாலின் உண்மைத்துவத்தைப் பற்றி தெரிந்து விடுகின்றது. அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருட்களிலிருந்து பயன் பெற்றார்கள்.

(சஹீஹுல் புகாரியின் மொழியாக்கம் மற்றும் விளக்கம் – ஹஸ்ரத் ஜைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷா சாஹிப் (ரலி) அவர்கள் – தொகுதி 1 பக்கம் 156, 157)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஹுது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கனவின் நிலையில் பால் பாத்திரம் கிடைத்தது பற்றி குறிப்பிட்டபோது அதன் பொருள் அறிவு என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 23 பக்கம் 467)

ஹஸ்ரத் அபூ சயீத் குத்ரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து இதனை செவியுற்றேன். அன்னார் (ஸல்) அவர்கள் கூறி வந்தார்கள். நான் தூங்கிக் கொண்டிருந்தேன். மக்கள் எனக்கு முன்னால் நிறுத்தப்பட்டதை நான் கண்டேன். அவர்கள் மேலாடைகள் அணிந்திருந்தனர். அவர்களின் சிலரின் மேலாடைகள் மார்பு வரை எட்டியிருந்தன. அவர்களில் சிலரின் ஆடைகள் அதற்கும் கீழ் வரை இருந்தன. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் என் முன்னால் நிறுத்தப்பட்டார்கள். அவர்கள் ஆடை அணிந்திருந்தார்கள். அதனை அவர்கள் நிலத்தில் இழுத்துக் கொண்டிருந்தார்கள். சஹாபிகள் தாங்கள் இதற்கு என்ன பொருள் கொண்டுள்ளீர்கள்? என்று கேட்டபோது மார்க்கம் என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுப் ஃபளாயிலுன் நபி (ஸல்) பாப் மனாகிப் உமர் பின் கத்தாப் ஹதீஸ் எண் 3691)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் பல்வேறு சஹாபிகளின் சிறப்பம்சங்களை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைக் குறித்து எனது சமுதாயத்தில் அல்லாஹ்வின் மார்க்கத்தில் மிகவும் அதிகமாக உறுதிவாய்ந்தவராக உமர் உள்ளார்கள் என்று கூறினார்கள்.

(சுனன் இப்னு மாஜா, கிதாபுஸ் சுன்னா பாப் ஹனாப் ஹதீஸ் எண் 154)

ஹஸ்ரத் மாலிக் பின் மிஃவல் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: உங்களின் கணக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு முன்பு உங்களை நீங்கள் கணக்கெடுத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் இது மிக எளிதாகும். உங்களது கணக்கீட்டிற்கு இது மிக எளிதாகும். மேலும் உங்களது உள்ளம் அளவீடு செய்யப்படுவதற்கு முன்னால் நீங்கள் உங்களது உள்ளத்தை அளந்து கொள்ளுங்கள். மேலும் எல்லாவற்றையும் விட மாபெரும் வழக்கிற்காக ஆயத்தமாகிக் கொள்ளுங்கள் என்று அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

يَوْمَئِذٍ تُعْرَضُوْنَ لَا تَخْفٰى مِنْكُمْ خَافِيَةٌ அதாவது மறைவாக இருக்கக்கூடிய எந்த விஷயமும் உங்களிடமிருந்து மறைந்திருக்காத நாளில் நீங்கள் முன்னிறுத்தப்படுவீர்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 161 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்கள் ஒரு முறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை நினைவுகூர்ந்தபோது இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! அன்னார் ஆரம்பத்தில் இஸ்லாத்தைக் கொண்டவர்களைச் சார்ந்தவராக இருக்கவில்லை. மேலும் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யக்கூடியவர்களில் அனைவரையும் விட

சிறந்தவராக இருக்கவில்லை. ஆனால் அவர்கள் உலகத்துடனான பற்றற்ற நிலையிலும் அல்லாஹ்வின் கட்டளைகளின் விவகாரங்களிலும் கடினத்தை மேற்கொள்வதில் மக்களில் மேலோங்கி இருந்தார்கள். மேலும் அல்லாஹ்வைக் குறித்து பழி சுமத்துபவரின் எந்தக் பழிக்கும் அன்னார் அஞ்சியதில்லை.

(இப்னு அபீ ஷைபா அவர்கள் எழுதிய கிதாபுல் ஃபஸாயில் என்ற நூல் தொகுதி 11 பக்கம் 120 ஹதீஸ் எண் 32546 – 2004 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதில் எங்களை விட முன்னிலை பெற்றிருக்கவில்லை. ஆனால் அன்னார் எங்களை விட எந்த விஷயத்தில் சிறப்பு பெற்றிருந்தார்கள் என்பதை நான் அறிந்து கொண்டேன். எங்களுக்கெதிரில் அன்னார் அனைவரையும் விட மிகவும் தூய்மையானவராகவும், உலகத்தின் மீது பற்றற்றவர்களாகவும் இருந்தார்கள்.

(இப்னு அபீ ஷைபா அவர்கள் எழுதிய கிதாபுல் ஃபஸாயில் என்ற நூல் தொகுதி 11 பக்கம் 121 ஹதீஸ் எண் 32548 – 2004 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

ஹிஷாம் பின் உர்வா தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சிரியாவிற்கு வந்திருந்தபோது அன்னார் (ரலி) அவர்களின் மேலாடை பின்புறத்தில் கிழிந்திருந்தது. ஒரு பெரிய, தடித்த சுன்பலானி வகையான ஆடையாக இருந்தது. சுன்பலானி என்பது எப்படிப்பட்ட நீளமான ஆடை என்றால் அது நிலத்துடன் உரசிக் கொண்டிருந்தது. இதுபோன்ற ஆடை ரோமின் பக்கமும் சுட்டிக் காட்டுகின்றது. எவ்வாறிருப்பினும் அன்னார் இந்த ஆடையை அஸ்ரி ஆதியா, அய்லா வாசிகளுக்கு அனுப்பினார்கள். அய்லா என்பது சிரியாவின் பக்கம் உள்ள ஒரு நகரம் ஆகும். சிரியாவுடன் செங்கடலின் கடற்கரையில் அந்த நகரம் அமைந்துள்ளது.

எவ்வாறிருப்பினும் அறிவிப்பாளர் கூறுகின்றார்: அவர் அந்த ஆடையை துவைத்தார். மேலும் அதை தைத்து ஒட்டுப் போட்டு விட்டார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்காக குப்துரி என்ற என்ற ஆடையையும் தயார் செய்து விட்டார். குப்துரி என்பது பருத்தியால் தயாரிக்கப்பட்ட வெள்ளை நிற மெல்லிய ஆடையாகும். பின்னர் இந்த இரண்டு ஆடைகளையும் எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் வந்தார். அன்னார் (ரலி) அவர்களுக்கு முன்னால் குப்துரி ஆடையை வைத்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த ஆடையை பிடித்து அதை தொட்டார்கள். பின்னர் இது மிகவும் மென்மையாக உள்ளது என்று கூறி அதனை அந்த நபரின் பக்கமே வீசி விட்டார்கள். மேலும் எனக்கு எனது மேலாடையை கொடுங்கள். ஏனென்றால் அது ஆடைகளில் வேர்வையை அதிகம் உறிஞ்சக்கூடியதாகும்.

(இப்னு அபீ ஷைபா அவர்கள் எழுதிய கிதாபுல் ஃபஸாயில் என்ற நூல் தொகுதி 11 பக்கம் 580, 581 ஹதீஸ் எண் 34427 – 2004 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

அதாவது நீங்கள் தைத்த ஆடையே சிறந்ததாகும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் அமீருல் மூஃமினாக இருந்தபோது நான் இந்த நிலையில் கண்டேன். அன்னார் (ரலி) அவர்களின் தோள்களுக்கு மத்தியில் இருந்த ஆடையில் மூன்று தோல்களால் ஆன ஒட்டுக்கள் போடப்பட்டிருந்தன.

மற்றோர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் தோள்களுக்கு மத்தியிலிருந்த ஆடையில் தோள்களால் ஒட்டுப் போடப்பட்டிருந்த நான்கு தையல்களை பார்த்தேன்.

(அத்தப்காத்துல் குப்ரா லி இப்னு சஅத் தொகுதி 3 பக்கம் 249 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இந்த நற்குறிப்பு இன்னும் தொடர்கின்றது. இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் நாட்களில் எடுத்துரைக்கப்படும்.

தற்போது நான் ஒரு மர்ஹூமைப் பற்றிய நற்குறிப்பை செய்ய விரும்புகின்றேன். மேலும் ஜுமுஆவிற்குப் பிறகு அன்னாரின் ஜனாஸா தொழுகையையும் நடத்துவேன். அந்த நற்குறிப்பு ஃபஸ்லே உமர் மருத்துவமனையில் மருத்துவராக இருந்த டாக்டர் தாஸீர் முஜ்தபா சாஹிப் அவர்களுடையதாகும். கடந்த நாட்களில் 70 வது வயதில் அன்னார் மரணமடைந்துள்ளார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَيۡهِ رٰجِعُوۡنَ

அன்னாருக்கு பல்வேறு வகையான நோய்கள் இருந்தன. ஆனால் அவ்வாறிருந்தபோதிலும் திடீரென அன்னாரின் உடல்நிலை மோசமானது. அதன் பிறகு நிலைமை மோசமாகிக் கொண்டே சென்றது. மேலும் அன்னாரின் மரணமும் நிகழ்ந்து விட்டது. اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَيۡهِ رٰجِعُوۡنَ

டாக்டர் சாஹிப் அவர்களின் குடும்பத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியும், மர்ஹூமின் தந்தையின் ஒன்று விட்ட சகோதரருமான செய்யது ஃபக்ருல் இஸ்லாம் சாஹிப் மூலமாக அஹ்மதிய்யத் தோன்றியது. ஆனால் டாக்டர் தாஸீர் முஜ்தபா சாஹிப் அவர்களின் தந்தை குலாம் முஜ்தபா சாஹிப் அவர்கள் தனது மாணவப் பருவ காலத்தில் 1938 ஆம் ஆண்டு பைஅத் செய்து அஹ்மதியாகி இருந்தார்கள். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் கீழ் வக்ஃப் செய்யும்படி கூறியிருந்தார்கள். அப்போது மருத்துவர் தாஸீர் அவர்களின் தந்தை டாக்டர் குலாம் முஜ்தபா சாஹிப் கராச்சியில் சிவிர் சர்ஜனாக பணிபுரிந்து கொண்டிருந்தார்கள். எனவே இந்த திட்டத்தின் கீழ் அவர்கள் அங்கிருந்து பென்ஷன் பெற்றுக் கொண்டார்கள். மேலும் வக்ஃப் செய்து 1970 ஆம் ஆண்டில் ஆப்ரிக்கா சென்று விட்டார்கள். 1999 வரை அங்கு கானாவிலும், நைஜீரியாவிலும், ஸிராலியோனிலும் தொண்டுகள் ஆற்றினார்கள்.

டாக்டர் தாஸீர் முஜ்தபா சாஹிப் அவர்கள் தமது கல்வியை முழுமை செய்த பிறகு மருத்துவம் பயின்றார்கள். சில காலம் சுமார் இரண்டு வருடம் வரை இராணுவத்தில் பணியாற்றினார்கள். பின்னர் கராச்சி சிவில் மருத்துவமனையில் பணி செய்தார்கள். பின்னர் கராச்சி ஜின்னா மருத்துவமனையில் சிறிது காலம் பணியாற்றினார்கள். 1982 ஆம் ஆண்டு அன்னார் மூன்று ஆண்டுகளுக்காக வக்ஃப் செய்தபோது கானாவிற்கு அன்னார் அனுப்பி வைக்கப்பட்டார்கள். அங்கு டீச்சிமான் மருத்துவமனை உள்ளது. அன்னார் அங்கு இருந்தார்கள். பின்னர் ஒஸேகோரே மருத்துவமனையில் தொண்டாற்றுவதற்கு அன்னாருக்கு நற்பேறு கிடைத்தது. இந்த மருத்துவமனையை அன்னாரின் தந்தையார் தான் துவங்கி இருந்தார்கள். அன்னார் தனது தந்தையுடன் மூன்று ஆண்டு காலம் பணி செய்தார்கள். அன்னாரிடமிருந்தே அன்னார் சர்ஜரி (அறுவை சிகிச்சை) செய்வதை கற்றுக் கொண்டார்கள். அன்னார் மிகச் சிறந்த அறுவை சிகிச்சை நிபுணராக இருந்தார்கள். கானாவில் மருத்துவர் தாஸீர் சாஹிப் சுமார் 30 ஆண்டுகள் தொண்டாற்றும் நற்பேறு பெற்றார்கள். அதன் பிறகு 17 வருடங்கள் ரப்வாவில் ஃபஸ்லே உமர் மருத்துவமனையில் தொண்டாற்றுவதற்கு அன்னாருக்கு நற்பேறு கிடைத்தது. இவ்வாறு மொத்தம் சுமார் 40 ஆண்டு காலம் அன்னாருக்கு தொண்டாற்றும் நற்பேறு கிடைத்தது.

அன்னாரின் திருமணம் செய்யது தாவூது முஸஃப்ஃபர் ஷா சாஹிப் மற்றும் சாஹிப்ஸாதி அம்மதுல் ஹகீம் சாஹிபா ஆகியோரின் மகளான அம்மத்துர் ரவூப் சாஹிபா அவர்களுடன் நடந்தது. சாஹிப்ஸாதி அம்மதுல் ஹகீம் சாஹிபா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் மகளாக இருந்தார்கள். டாக்டர் சாஹிபிற்கு ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளனர். அன்னாரின் மகள் எனது மருமகளும் ஆவார்.

அன்னாரின் மனைவி அமத்துர் ரவூஃப் கூறுகின்றார்கள்: நோய்வாய்ப்பட்ட நாட்களில் அன்னாரை சந்திப்பதற்காக நான் சென்றபோது ஹுஸூர் அவர்களுக்கு ஸலாம் கூறும்படி அன்னார் என்னிடம் கூறினார்கள். எனக்கு ஸலாம் அனுப்பினார்கள். மேலும் கூறுகின்றார்கள்: இந்த முறை எப்படிப்பட்ட நிலையாக இருந்ததென்றால் ஒருவர் பிரியாவிடை ஸலாம் கூறுவதைப் போன்று எனக்கு தோன்றியது.

பின்னர் எழுதுகின்றார்கள்: கானாவில் ஒரு முறை மிகக் கடுமையாக நோய்வாய்ப்பட்டார்கள். இரவை மிக துன்பத்துடன் கழித்தார்கள். மிக அபாயகரமான நிலை இருந்தது. ஃபஜர் நேரத்தில் என்னிடம் கூறினார்கள்: ஒருவர் ஸலாம் கூறியுள்ளார். யார்? என்று பார்க்கும்படி கூறினார்கள். கதவு அடைக்கப்பட்டுள்ளது என்று நான் கூறினேன். யாரும் உள்ளே வர முடியாது. ஒரு மணி நேரம் கழித்து எனக்கு ஸலாத்திற்கான சப்தம் வந்தது என்று என்னிடம் மீண்டும் கூறினார்கள். யாரோ ஸலாம் கூறியுள்ளார் என்று கூறினார். அதன் பிறகு அல்லாஹ்வின் அருளால் அன்னாரின் உடல்நிலை மேம்படத் தொடங்கியது. மேலும் அன்னார் குணமாகி விட்டார்கள்.

அதன் பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: நான் அவர்களுக்காக துஆவும் செய்தேன். அப்போது அன்னாருக்கு நீண்ட ஆயுள் இருக்கும்

என்றே எனக்கு கூறப்பட்டது. அன்னார் கூறுகின்றார்கள்: மர்ஹூம் மிகவும் பணிவுமிக்கவரும், தன்னலமற்றவரும், தீங்கு பயக்காத மனிதரும் ஆவார். ஒருபோதும் எவருக்கும் தீங்கோ அல்லது புறம்பேசவோ அல்லது புகார் செய்யவோ இல்லை. ஒருவர் செய்து கொண்டிருக்கின்றார் என்றாலும் முற்றிலும் அமைதியாகவே இருப்பார்கள்.

டாக்டர் சாஹிபின் சகோதரர் இவ்வாறு எழுதுகின்றார்கள்: நோயாளிகளை விடுமுறைக்கு பிறகும் கூட பரிசோதித்து வந்ததை நாங்கள் பார்த்துள்ளோம். ஏனைய மருத்துவர்கள் குறைவாகவே பார்க்கின்றனர். நோயாளிகள் மருத்துவமனைக்கு வருகின்றனர். எனவே இந்த நோயாளிகள் இதேபோன்று சிகிச்சையின்றி திரும்பிச் செல்வதை விட நான் அவர்களை பார்த்துக் கொள்கின்றேன் என்று கூறி வந்தார்கள். ஏனைய மருத்துவர்களின் சுமையையும் தானே சுமந்து கொள்வார்கள். மிகவும் கண்ணியமிக்க நபராகவும், குறைவாக பேசுகின்ற பண்பிற்கு எஜமானராகவும் இருந்தார்கள். எப்போதும் புன்சிரித்தவாறு உடல்நலத்தை விசாரித்து கடந்து செல்வார்கள் என்று பாதுகாப்பு மற்றும் மருத்துவமனையின் ஊழியர்கள் கூறியுள்ளார்கள். நோயாளிகளுடன் பொதுவாகவும், அஹ்மதிகளுடன் குறிப்பாகவும் அன்னார் மிகவும் நல்ல முறையில் நடந்து வந்தார்கள். ஒருவர் மருத்துவமனை நேரத்திற்கு பிறகு வந்தாலும் பொதுவாக கட்டணம் வாங்காமலேயே பரிசோதித்து வந்தார்கள்.

ரப்வாவின் ஜாமிஆ அஹ்மதிய்யா முதல்வர் முபஷ்ஷிர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: சில முறை அன்னாருடன் அமர்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. மிக குறைவாக பேசும் மனிதராக இருந்தார்கள். மிக மென்மையுடனும், பொறுமையுடனும், நேசத்துடனும், பணிவு மற்றும் தாழ்மை குணத்துடனும் உரையாடி வந்தார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: இது போன்ற பணிவையும், தாழ்மை குணத்தையும், எளிமையையும் வேறு எவரிடத்திலும் நான் கண்டதில்லை.

அன்னார் கூறுகின்றார்கள்: மருத்துவமனையிலும் ஏழை மக்களிடமிருந்து எப்படிப்பட்ட சம்பவங்களை நான் கேட்டுள்ளேன் என்றால் அதனால் பொறாமை ஏற்படுகின்றது. மேலும் மருத்துவமனையில் இதுபோன்ற மருத்துவர்களும் உள்ளனர் என்ற மகிழ்ச்சியும் ஏற்படுகின்றது.

தொடர்ந்து அன்னார் கூறுகின்றார்கள்: டாக்டர் சாஹிப் நோயாளிகளை மருத்துவமனை நேரம் முடிந்து விட்ட பிறகும் பரிசோதித்து வந்தார்கள் என்று முன்னரே நான் கூறி விட்டேன். ஒரு முறை டாக்டர் சாஹிப் எழுந்து வெளியே சென்று விட்டார்கள். தனது அறையிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு நோயாளி வந்து விட்டார். அந்நிலையில் அந்த நோயாளிக்காக அன்னார் காத்துக் கொண்டிருந்ததைப் போன்று அன்னார் அந்த நோயாளியை அறைக்குள் அழைத்துச் சென்றார்கள். ஏழைகளை மிக அதிகமாக பராமரிக்கக் கூடியவராக இருந்தார்கள்.

நான் 2004 ஆம் ஆண்டில் ஆப்ரிக்க சுற்றுப் பயணத்தில் சென்றிருந்தேன். அத்ஹர் சுபைர் சாஹிப் இங்கு ஜெர்மனியின் மனிதம் முதலில் அமைப்பின் சேர்மனாக உள்ளார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: கானாவிலும், ஏனைய இடங்களிலும் டாக்டர் சாஹிப் என்னுடன் சுற்றுப் பயணத்தில் இருந்தார்கள். பெனினிற்கும் சென்றிருந்தார்கள்.

அத்ஹர் சுபைர் சாஹிப் கூறுகின்றார்கள்: டாக்டர் சாஹிப் அவர்களின் பார்வை ஒரு பெண்ணின் மீது பட்டது. அந்தப் பெண்மணி சற்று நிம்மதியிழந்து காணப்பட்டார். என்ன காரணம்? என்று அந்தப் பெண்ணிடம் கேட்கும்படி டாக்டர் சாஹிப் என்னிடம் கூறினார்கள். அப்போது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை சந்திப்பதற்காக நான் வந்திருந்தேன். என்னிடத்திலிருந்த பணம் அனைத்தும் செலவாகி விட்டது. திரும்பிச் செல்வதற்கு என்னிடத்தில் பணம் இல்லை என்று அந்தப் பெண்மணி கூறினார். அப்போது நல்லது! அந்தப் பெண்ணிற்கு 20 ஆயிரம் பிரான்க்ஃபா கொடுத்து விடும்படி டாக்டர் சாஹிப் கூறினார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: அந்த நேரத்தில் அந்த காலத்தில் அந்த தொகை ஒரு சாதாரண நபரின் சுமார் ஒரு மாத வருமானத்திற்கு சமமானதாக இருந்தது. டாக்டர் சாஹிப் உடனடியாக அதை கொடுத்து விட்டார்கள்.

ஹனீஃப் முஹ்மூத் சாஹிப் அவர்களும் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: மிகவும் நடுநிலைதன்மையை பேணக் கூடியவராகவும், பணிவுமிக்கவராகவும் தென்பட்டார்கள். வாக்கிஃபீன்களுடன் மிக அன்புடனும், நேசத்துடனும் நடந்து வந்தார்கள். ஒரு முறை அன்னாரின் மனைவி நோய்வாய்ப்பட்டு விட்டார்கள். அப்போது அன்னார் சிகிச்சை செய்தார்கள். மாறாக கூறுகின்றார்கள்: நாங்கள் ஆலோசனைக்காகவே சென்றிருந்தோம். சிகிச்சைக்காக சென்றிருக்கவில்லை.

மருந்துச் சீட்டு எங்கே? என்று அன்னார் கேட்டார்கள். நாங்கள் சீட்டு பதியவில்லை என்று கூறினோம். அப்போது உடனடியாக தனது உதவியாளரை அழைத்தார்கள். மேலும் தனது சட்டைப் பையிலிருந்து 100 ரூபாய் எடுத்து அவரிடம் கொடுத்து இவர்களுக்குரிய சீட்டை பதிந்து எடுத்து வரவும் என்று கூறினார்கள். நாங்கள் கூறிய பிறகும் கூட பணத்தை பெற்றுக் கொள்ளவில்லை.

அன்னார் எழுதுகின்றார்கள்: கள்ளம் கபடமற்ற முகத்தைக் கொண்ட மனித வடிவில் சுற்றி வலம் வந்த வானவராக அன்னார் இருந்தார்கள். அமைதியான இயல்பு படைத்த மனிதராக இருந்தார்கள். மஸ்ஜித் முபாரக்கிலும் தொழுகைக்காக வந்தால் மிகவும் அமைதியுடன் வந்து நீண்ட தொழுகைகளை நிறைவேற்றுவார்கள்.

டாக்டர் முஸஃப்ஃபர் சவுத்ரி சாஹிப் சிறுநீரக மருத்துவர் ஆவார்கள். இங்கு யூ.கே வில் வசிக்கின்றார்கள். அன்னாரும் அங்கு வக்ஃபே ஆர்ஸியில் சென்று வருகின்றார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: மர்ஹூம் அமைதியான இயல்பை கொண்டவராகவும், மிகவும் பரிவும், அனுதாபமும் கொண்ட மனிதராக இருந்தார்கள். மக்களுக்கு உதவி செய்வதற்காக புதிய விஷயங்களை கற்றுக் கொள்கின்ற ஆர்வம் அன்னாருக்கு அதிகம் இருந்தது. நான் வக்ஃபே ஆர்ஸி செய்வதற்கு சென்றபோதெல்லாம் அன்னாரின் அலுவலகத்தில் நான் அமர்ந்து வந்தேன். அன்னார் தனது நாற்காலியில் என்னை அமர்த்தி விடுவார்கள். நான் மறுத்தபோதிலும் தாங்கள் எனது இடத்தில் அமருங்கள் என்று கூறி அன்னார் வேறு இடத்திற்கு சென்று அமர்ந்து விடுவார்கள்.

ரப்வாவின் வகீலுல் மால் அவ்வல் தஹ்ரீகே ஜதீத் லுக்மான் சாஹிப் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஏராளமான சிறப்புகளுக்கு அன்னார் சொந்தக்காரராக இருந்தார்கள். பொருள் தியாகத்தில் சிறப்பான ஆர்வம் படைத்தவராக இருந்தார்கள். பாகிஸ்தான் வந்ததிலிருந்து தஹ்ரீகே ஜதீத் சந்தாவை ஒவ்வொரு ஆண்டும் ஆரம்ப காலத்திலேயே அறிவிப்பு செய்யப்பட்டவுடன் உடனடியாக சுயமே மால் அலுவலகத்திற்கு வருகை தந்து செலுத்தி விடுவார்கள்.

தொடர்ந்து அன்னார் எழுதுகின்றார்கள்: மருத்துவம் அன்னாரின் தொழிலாக இருந்தது. ஆயினும் எப்போதும் மனித இனத்திற்கு தொண்டாற்றுவதே அன்னாரின் குறிக்கோளாக இருந்து வந்தது. தேவை ஏற்பட்டால் ஆங்கில மருத்துவத்தை தவிர வேறு எந்த சிகிச்சையும் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதல்ல. மாறாக, ஹோமியோபதி சிகிச்சையும் வழங்கி வந்தார்கள்.

டாக்டர் நயீம் சாஹிப் அவர்கள் இன்றைய நாட்களில் ஒஸோகோரே மருத்துவமனையின் இன்சார்ஜ் ஆக உள்ளார்கள். அன்னார் கூறுகின்றார்கள்:

இன்சார்ஜ் மிஷனரி மருத்துவர் என்ற முறையில் அன்னார் ஒஸோகோரேவில் 21 ஆண்டுகள் தொண்டாற்றி வந்துள்ளார்கள். இன்று அன்னாரின் மரண செய்தியை செவியுற்று இந்த ஊரைச் சேர்ந்த மற்றும் இந்த பகுதியைச் சார்ந்த ஏராளமான மக்களும் வந்தார்கள். அவர்களுக்கு டாக்டர் சாஹிப் அவர்களுடன் தொடர்பு இருந்தது. அனைவரும் வேதனையுற்றார்கள். குறிப்பாக இரங்கலையும் தெரிவித்து வருகின்றார்கள். டாக்டர் சாஹிப் மிகவும் எளிமையான இயல்பு படைத்தவராகவும், குறைவாக பேசக் கூடியவராகவும், தனது பணியில் மெய்மறந்து இருப்பவராகவும், ஏழைகளை பராமரிப்பவராகவும், மிகவும் அதிகமாக விருந்தினர்களை உபசரிக்கும் பண்பைக் கொண்ட நபராகவும் இருந்தார்கள் என்று அந்த மக்கள் கூறி வந்தனர். இதேபோன்று அன்னாருக்கு உலகியல் அறிவுடன் ஜமாஅத் புத்தகங்களையும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புத்தகங்களையும் படிப்பதற்கு மிக அதிகமான ஆர்வம் இருந்தது.

தொடர்ந்து டாக்டர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: மர்ஹூம் டாக்டர் சாஹிப் அஹ்மதிய்யா மருத்துவமனை ஒஸோகோரேவில் சந்தேகத்திற்கிடமின்றி அறுவை சிகிச்சை மைதானத்தில் மிகச் சிறந்த தொண்டுகளை ஆற்றியுள்ளார்கள். இன்று மேற்கு ஆப்ரிக்காவின் பல்வேறு நாடுகளிலிருந்து இந்த மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகவும், குணம் பெறும் நோக்கத்திலும் வருகின்ற நோயாளிகளின் வடிவில் அந்த கனிகளை பார்த்து வருகின்றோம். மேலும் அவர்கள் தனது எளிய ஆப்ரிக்கன் மொழிகளில் முஜ்தபா சாஹிப் அவர்களைப் பற்றி குறிப்பிடுகின்றார்கள். தாஸீர் முஜ்தபா என்பது

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 02 Dec 2021 Issue No. 48

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

அன்னாரின் பெயராக இருந்தது. மருத்துவர் முஜ்தபா என்ற பெயரால் அறியப்பட்டு வந்தார்கள். அன்னாரின் தந்தையும் இங்கு சில ஆண்டுகள் பணி செய்து வந்தார்கள். இதே பெயரால் பின்னர் தொடர்ந்து நினைவு கூறப்பட்டு வந்தார்கள். அன்னார் மருத்துவமனையின் வளாகத்தில் ஓர் அழகிய பள்ளிவாசலையும் கட்டியுள்ளார்கள்.

எவ்வாறிருப்பினம் டாக்டர் சாஹிப் ஒரு தன்னலமற்ற மற்றும் படைப்பின சேவையாற்றக்கூடிய மனிதராக இருந்தார்கள். மேலும் தனது தொழிலை அன்னார் அதே பணிக்காக பயன்படுத்தி வந்தார்கள். அன்னாரின் தந்தையிடத்திலும் அன்னாரிடத்திலும் நான் இந்த சிறப்புத் தன்மையை நேரடியாக பார்த்துள்ளேன். அதாவது ஏழை நோயாளிகளின் சிகிச்சை மட்டுமின்றி இலவச மருந்துடன் உணவுக்காகவும் பணம் கொடுத்து வந்தார்கள். இன்னும் கூறப்போனால் முட்டையும், பாலும் வாங்கி வைத்து வந்தார்கள். உங்களது பலவீனத்தை அகற்றுவதற்கு இவை அவசியமாகும் என்று கூறி நோயாளிகளுக்கு வழங்கி வந்தார்கள். மருந்துகளையும் இலவசமாக வழங்கி வந்தார்கள். அத்துடன் உணவையும் இலவசமாக கொடுத்து வந்தார்கள். நீங்கள் ஆரோக்கியம் பெறுவதற்கு இதனை பயன்படுத்தி வாருங்கள் என்று (நோயாளிகளிடம்) கூறி வந்தார்கள்.

டாக்டர் குலாம் முஜ்தபா சாஹிப் அவர்களும் கானாவில் பெரும் தொண்டாற்றி உள்ளார்கள். ஆனால் டாக்டர் தாஸீர் முஜ்தபா அவர்கள் அந்த பணியை மேலும் முன்னெடுத்துச் சென்றார்கள். எனவே அன்னாரை மிகவும் புகழ்ந்து வந்த கானாவைச் சேர்ந்த சில மக்களையும் நான் நேரடியாக அறிவேன். எவ்வாறிருப்பினும் அன்னார் உண்மையான வக்ஃபின் உணர்வுடன் தொண்டுகள் ஆற்றியுள்ளார்கள். வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள் அன்னாரிடம் செல்லும்போது அன்னார் அவர்களை சிறப்பாக கவனித்து வந்தார்கள். அவர்களுக்கு சிகிச்சை செய்து, தனது வீட்டில் விருந்தினராகவும் தங்க வைப்பார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் சுற்றுப் பயணத்தில் சென்றிருந்தபோது அன்னாரும் மர்ஹூமின் வீட்டில் தங்கியிருந்தார்கள். விருந்து உபசரிப்புக்கான ஒரு சிறப்பான தன்மை அன்னாரிடம் இருந்தது.

ஹனீஃப் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: மர்ஹூம் ஒரு வானவராக இருந்தார்கள். நிச்சயமாக நடமாடும் வானவராக இருந்தார்கள். அல்லாஹ் அன்னார் மீது ரஹ்மத்தை பொழிவானாக. அந்தஸ்தை உயர்த்துவானாக.

விருந்து உபசரிப்பு தொடர்பாக நான் இதனையும் கூறி விடுகின்றேன். வீட்டிலுள்ள பெண்களும் ஒத்துழைக்கும்போது தான் விருந்து உபசரிப்பும் நடைபெற முடியும். அன்னாரின் மனைவியும், மகளும் மிக அதிகமாக விருந்து உபசரிப்பு செய்யக் கூடியவர்கள் ஆவர். மேலும் தொண்டாற்றக் கூடியவர்களாக இருந்தார்கள். அன்னாரின் (மனைவியின்) ஆயுள் மற்றும் ஆரோக்கியத்திற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அன்னாரின் வயதிலும், ஆரோக்கியத்திலும் பரக்கத் செய்வானாக. அன்னாரின் பிள்ளைகளுக்கும் அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பேறை வழங்குவானாக. மேலும் அவர்களும் தங்களது தாயின் தொண்டிற்கான உரிமையை செலுத்தக்கூடியவர்களாக திகழட்டுமாக.

(தமிழில்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS
DOORS & STEELS EXPERT



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

வையுங்கள். எல்லா புறமிருந்தும் குரைஷிகள் தீங்குகள் இழைக்க ஈடுபட்டிருந்தனர். நிராகரிப்பாளர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்கு திட்டம் தீட்டியிருந்தனர். அன்னாரின் அந்த காலகட்டத்தை சீர்தூக்கிப் பாருங்கள். அந்த காலம் மாபெரும் சோதனைக்குரிய காலமாக இருந்தது. இங்கு அமர்ந்துள் நீங்கள் அனைவரும் தத்தமது இடத்தில் சிந்தித்துப் பாருங்கள். இதுபோன்ற ஒரு சோதனை வந்து விட்டால் யார் ஆதரவாக இருப்பார்? யார் யாரெல்லாம் இந்த நபரிடம் பைஅத் செய்துள்ளார் என்று அரசாங்கத்தின் சார்பாகவே விசாரணை நடைபெறத் தொடங்கி விட்டால் நாங்கள் பைஅத்தில் இணைந்துள்ளோம் என்று வீரத்துடன் எத்தனை நபர்கள் கூறுவர்?

நான் அறிவேன். சிலரின் கை, கால்கள் உறைந்து விடும். அவர்களுக்கு உடனடியாக தமது சொத்துக்களையும், உறவினர்களையும் நமக்கு விட்டு விட நேரிடுமே என்ற எண்ணங்கள் வந்து விடும். கஷ்ட நேரத்தில் ஆதரவாக இருப்பது என்பது எப்போதும் முழுமையான நம்பிக்கை கொண்ட மக்களின் பணியாகும். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது வந்த கடினமான சோதனைக்குரிய காலகட்டமாக அது இருந்தது. மேலும் அன்னார் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்கு சதித்திட்டங்கள் தீட்டப்பட்டுக் கொண்டிருந்தன. ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் நட்பின் எப்படிப்பட்ட உரிமையை நிறைவேற்றினார்கள் என்றால் உலகில் அதற்கு (நிகரான) உதாரணம் கிடைப்பதில்லை. ஈமானின்றி இந்த வலிமையும், ஆற்றலும் கிடைக்காது. மனிதன் ஈமானை செயல் ரீதியாக கண் முன் நிறுத்திக் கொள்ளாதவரை எதுவும் நடக்காது. சாக்குப் போக்குகள் கூறுவது அந்த நேரம் வரை நீங்காது. செயல் ரீதியாக நெருப்பு மூட்டப்பட்டிருக்கும்போது உறுதிப்பாட்டுடன் வெளியேறக் கூடியவர்கள் வெகு சிலரே ஆவர். ஹஸ்ரத் மஸீஹின் ஹவாரிகள் அந்த துன்பத்தின் இறுதி நேரத்தில் அன்னாரை விட்டு விட்டு ஓடிவிட்டனர். மேலும் சிலரோ அன்னாரின் முன்பே அன்னாரை சபித்தும் விட்டனர்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 338 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

*முதல் பக்கத்தின் தொடர்ச்சி...*
*ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கூற்று...*

இல்லையென்றால் மேலே கூறப்பட்டுள்ள இதே சிறப்பு இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திலேயே அன்னாருக்கு கிடைத்திருந்தது). இந்த ஹதீஸ் இருக்கும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்ட அந்த ஜின்கள் வேறொரு வகையான படைப்பினமாக இருந்தார்கள் என்று யாரால் கூற முடியும்? ஏனென்றால் திருக்குர்ஆன் தெளிவாக இதனை கூறுகின்றது. அதாவது அவர்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் நம்பிக்கையாளர்களை சார்ந்தவர்களாக இருந்தனர். அவர்கள் பனீ இஸ்ராயீலை சார்ந்தவர்களாக இல்லையென்றால் அவர்கள் மூஸா (அலை) மீது நம்பிக்கை கொள்வது ஆகுமானதாக எவ்வாறு இருக்க முடியும்?

كَمَآ اَرْسَلْنَآ اِلٰى فِرْعَوْنَ رَسُوْلًا அதாவது மூஸா ஃபிர்அவ்னிடம் அனுப்பப்பட்டார்கள் என்று திருக்குர்ஆன் கூறுகிறது. ஆனால் ஃபிர்அவ்ன் பனீ இஸ்ராயீலை சார்ந்தவனாக இருக்கவில்லை என ஒருவர் ஆட்சேபனை செய்தால் அவருக்குரிய பதில் இதுவாகும். சமுதாயம் என்பதன் பொருள் சில முறை இனத்தின் (அடிப்படையிலான) சமுதாயத்தையும் குறிக்கும். மேலும் சில முறை தேசியத்தையும் குறிக்கும். அதாவது இந்தியாவில் பல்வேறு சமுதாயங்கள் வசிக்கின்றன. அவர்களிடம் வருகின்ற நபி இந்திய சமுதாயத்தின் பக்கம் அனுப்பப்பட்டு வந்தார் என்பதே தவிர அவர் பிரம்மன், அல்லது ராஜ்பூத் சமுதாயத்தின் பக்கம் அனுப்பப்பட்டார் என்பதல்ல. ஏனென்றால் ஓரிடத்தில் வசிக்கக்கூடிய சமுதாயங்கள் எளிமைக்காக ஒரே சமுதாயமாக கணக்கிடப்படுகின்றன. (தொடரும்...)

(தஃப்ஸீரே கபீர் தொகுதீ 4 பக்கம் 68 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad